முதல் வேற்றுமையிலமையும் யத், தத் ஆகியவைகளுக்குப்பின் 'வதுப்' மேலே கூறிய பொருளில் வரும்.

யாவான் 'இத்தனையளவு' (யத் வதுப்) 'ஏதாவான்'

வா: வதுப் ப்ரகரணே யுஷ்மதஸ்மத்³ப்⁴யாம் ச²ந்த³ஸி ஸாத்ருஸ்'ய உபஸங்க்²யானம்

வேதமொழியில் 'யுஷ்மத், அஸ்மத்' ஆகிய சொற்களுக்குப்பின் 'வதுப்' இதைப் போன்ற என்ற பொருளைச் சுட்டும். ந த்வா வா அன்யோ தி³வ்யோ ந பார்தி³வோ

ந ஜாதோ ந ஜனிஷ்யதே: த்வாவத:

புருஷஸோ யக்கும் விப்ரஸ்ய மாவத:

5.2.40 கிமித³ம் ப்⁴யாம் வா க⁴:

கிம், இதம் என்ற சொற்களுக்குப்பின் வரும் 'வதுப்' ஒட்டின் 'வ்' க்குப் பதிலியாக 'க⁴' (இய்) வரும்.

கிம் + வதுப் = கீ + வதுப் (6.3.90)

க் + க⁴துப் = க் + இப் + த் = கியத்

இயத்

5.2.41 கிம: ஸம்க்²யா பரிமாணேட³தி ச

முதல் வேற்றுமையிலமையும் 'கிம்' என்ற சொல்லுக்குப்பின் டதி (அதி) வதுப், ஒட்டுக்கள் 'எண் அளவு' (அதாவது எத்தனை) என்ற பொருளில் வரும்.

கதி ப்³ராஹ்மணா:, கியந்தோ ப்³ராஹ்மணா:

'எத்தனை பிராம்மணர்கள்'

5.2.42 ஸங்க்²யாயா அவயவே தயப்

'இத்தனை பகுதிகளைக் கொண்டது அது' என்ற பொருளில் தயப் (தய) ஒட்டு எண்ணுப் பெயருக்குப்பின் வரும்.

பஞ் சதயம்–ஐந்து பகுதிகளைக் கொண்ட
சதுஷ்டயம்–நான்கு பகுதிகளைக் கொண்ட
சதுஷ்டயீ

5.2.43 த்[3]வித்ரிப்[4]யாம் தயஸ்யாயஜ்வா
த்வி, த்ரி என்ற எண்ணுப் பெயர்களுக்குப்பின் வரும். 'அயச்' ஒட்டுக்குப் பதிலியாக, விருப்பாக 'அயச்' வரும்.
த்வயம் அல்லது த்விதயம், இரண்டு பகுதிகளைக் கொண்ட 'த்ரிதயம், த்ரயம்'

5.2.44 உப[4]ாது[3]த[3]ாத்தோ நித்யம்
'உப[4]' இரண்டும், இருவர் என்ற சொல்லுக்குப்பின் வரும் தயப் 'புக்கு' 'அயச்' ஆதேசம் கட்டாயமாக வரும். அது உதாத்தம் பெறும்.
உப[4]யோ மணி:, உப[4]யே தேவமனுஷ்யா:

5.2.45 தத[3]ஸ்மின்னதி[4]கமிதி த[3]ஸாந்தாட்[3]ட[3]:
'த[3]ஸன்' இல் முடியும் எண்ணுப் பெயர்களுக்குப்பின் (முதல் வேற்றுமையிலமையும்) ட[3] (அ) ஒட்டு இது 'அதில் மிகுதியாகும்' என்ற பொருளில் வரும்.
ஏகாதஸம் ஸ'தம் 'இந்நூற்றில், பதினொன்று அதிகம்' அதாவது நூற்று பதினொன்று.

5.2.46 ஸத[3]ந்த விம்ஸ'[1]தேஸ்'[1] ச
'ஸத்' தில் முடியுஞ் சொற்களுக்குப் பின்னும் விம்ஸதி '20' என்ற சொல்லுக்குப்பின்னும் 'ட' ஒட்டு வரும் (மேலே கூறிய பொருளில்) இறுதி, அத், அதி கெடும்.
த்ரிம்ஸம் ஸதம்
விம்ஸம் ஸதம்

வா: தத[3]ந்தாத[3]பி இதி வக்தவ்யம்
'விம்ஸதி'யிறுதியுறுப்பினராக நிற்கும் தொகைக்குப்பின்னும் அவ்வாறே
ஏகவிம்ஸம் ஸதம்

வா: ஸங்க்[2]யாக்[3]ரஹணம் ச கர்தவ்யம்
இது எண்ணுப் பெயர்களுக்குத்தான். ஆகையால் கோவிம்ஸதி ரதி[4] கா அஸ்மின் கோஸத்தே இதி, இங்கு வராது.

5.2.47 ஸங்க்[2]யாயா கு[3]ணஸ்ய நிமானே மயட்
முதல் வேற்றுமையிலமையும் எண்ணுப் பெயருக்குப்பின் மயட் (மய) ஒட்டு ஒன்று[illegible]லியாகக் கொடுக்கப்படும் மற்றொரு பொருளைச் சுட்டும்போது, 'இதைவிட மற்றது இத்தனை மடங்கு அதிகம்' அல்லது இதன் விலையின்

பகுதி. மற்றொன்றின் அத்தனை மடங்குக்கு சமம்' என்ற பொருளில் வரும்.
யவானாம் த்^{3}வௌ ப^{4}ாகெ^{3}ள நிமானமஸ்ய
உத^{3}ஸ்வித்^{3} ப^{4}ாக^{3}ஸ்ய த்^{3}விமயம் உதஸ்வித் யவானாம்
பார்லியின் ஒரு பங்கின் விலை, உதஸ்விதத்தின் இரண்டு மடங்காகும்.

வா: நிமேயே சாபி த்^{3}ருஸ்'யதே
இவ்வொட்டு, வாங்கும் அல்லது இரண்டு பொருட்களின் ஒப்பீடான மதிப்பையும் குறிக்கும்.
உதஸ்விதோ த்^{3}வௌ ப^{4}ா^{3}கௌ நிமேமஸ்ய
யவபாக^{3}ஸ்ய த்^{3}விமயா: த்விமயா யவா உத^{3}ஸ்வித:
உதஸ்விதோ த்^{3}வௌ குணா நிமேயௌயேஷா
மேக குணானாம் யவானாம்
'உதஸ்வித'த்தின் பண்டமாற்று மதிப்பு பார்லியின் இரண்டு மடங்காகும்.
நிமான–பண்டமாற்றும் பொருள்
நிமேய–மாற்றாக ஏற்றுக் கொண்ட பொருள்

5.2.48 தஸ்ய பூரணே டட்^{3}
6ஆம் வேற்றுமையிலமையும் எண்ணுப் பெயருக்குப்பின் 'டட்' (அ) ஒட்டு, 'அதனை முழுதாக்குதல்' என்ற பொருளில் வரும்.
ஏகாத^{3}ஸ: பதினொன்றாவது.
அதாவது பத்தோடு சேர்க்கப்பட்ட ஒன்று பதினொன்று முழுதாக்குகிறது.

5.2.49 நாந்தாத் அஸம்க்^{2}யாதோ மட்
'ன்' ஈற்று எண்ணுப் பெயரோடு, 'டட்' ஒட்டு இணைக்கும்போது, அவ்வொட்டுக்குமுன் 'மட்' ஆகமமாகும். மற்றொரு எண்ணுப்பெயர், 'ன்' ஈற்று எண்ணுப் பெயருக்கு முன் நிற்காமலிருந்தால்தான் இவ்விதி செயற்படும்.
பஞ்சம: 'ஐந்தாவது'
ஆனால் விம்ஸ: (ஈறு 'ன்' அல்ல)
ஏகாதஸ: (எண்ணுப் பெயர் முன் நிற்கிறது)

5.2.50 த^{2}ட்சச் ச^{2}ந்த^{3}ஸி
மேலே கூறிய சூழலில், வேதமொழியில் 'த^{2}ட்' ஆகமம் ஆகும். 'மட்'டும் ஆகமமாகும்.
பஞ்சத^{2}: ஸப்தத^{2}: அல்லது பஞ்சம:, ஸப்தம:

5.2.51 ஷட் கதி கதிபய சதுராம் து^{2}க்
ஷட், கதி, கதிபய, சதுர் ஆகிய சொற்களுக்குப்பின்னிணைக்கப்படும் 'டட்' ஒட்டுக்கு முன் 'து^{2}க்' ஆகமமாகும்.
ஷஷ்ட^{2}: 'ஆறாவது'
கதித^{2}:, கதியத^{2}:, சதுர்த^{2}:

வா: சதுரஸ்ச^{2}யதாவாத்^{3}ய க்ஷர லோபஸ்ச

'சதுர்' என்ற சொல்லுக்குப்பின் ச^{2} (ஈய), யத் (ய) ஒட்டுக்கள் வரும் அச்சொல்லின் முதலெழுத்து கெடும். துரீய:, துர்ய:

5.2.52 ப^{3}ஹு பூகே^{3}ா க^{3}ண ஸங்க^{4}ஸ்ய திது^{2}க்

ப^{3}ஹு, பூகே^{3}ா, க^{3}ண, ஸங்க^{4} ஆகியவைகளுக்குப்பின் தொடரும் 'ட ட்' ஒட்டுக்கு முன் திது^{2}க் ஆகமமாகும்.

ப^{3}க்ஷு தித^{2}:, பூகதித^{2}:, கணதித^{2}:, ஸங்க^{4}தித^{2}:

5.2.53 வதோரிது^{2}க்

'வத்' ஈற்றுச் சொல்லின்பின் இணைக்கப்படும் 'டட்' ஒட்டுக்கு முன் 'இது^{2}க்' ஆகமமாகும்.

யாவதித^{2}:, தாவதி^{2}த^{2}:

5.2.54 த்^{3}வேஸ் தீய:

'த்^{2}வி'க்குப்பின் 'தீய' ஒட்டு மேலே கூறிய பொருளில் வரும்.

த்^{3}விதீய: 'இரண்டாவது'

5.2.55 த்ரே: ஸம்ப்ரஸாரணம் ச

'த்ரி'க்குப்பின் மேலே கூறிய ஒட்டு வரும்போது அடிச் சொல், உயிராக்கம் நிகழும்.

த்ரி + தீய = த்ரு + தீய = த்ருதீய 'மூன்றாவது'

5.2.56 விம்ஸத்யாதி^{3}ப்^{4}யஸ் தமட்^{3} அன்யதரஸ்யாம்

'விம்ஸதி' முதலியவைகளுக்குப்பின் 'தமட்' விருப்பாக ஆகமமாகும் (மேற்கூறிய பொருளில்)

விம்ஸதி தம: இருபதாவது அல்லது விம்ஸ^{1}:, ஏக

விம்ஸதிதம: ஏகவிம்ஸ^{1}:

5.2.57 நித்யம் ஸதாதி^{3} மாஸார்த^{4}மாஸ ஸம்வத்ஸராத் ச

'ஸத' முதலியவைகளுக்குப்பின்னும், மாஸ அர்த^{4}மாஸ, ஸம்வத்ஸர ஆகியவைகளுக்குப்பின்னும் கட்டாயமாக, 'தமட்' ஆகமம் 'ட^{3}ட்' ஒட்டுக்குமுன் மேலேகூறிய பொருளில் வரும்.

ஸததம: 'நூறாவது'

மாஸதமோ தி^{3}வஸ: 'மாதத்தினிறுதிநாள்'

அர்த^{4}மாஸதம:, ஸம்வத்ஸர தம:

5.2.58 ஷஷ்ட்யாதே^{3}ஸ்^{1} சாஸங்க்^{2}யாதே^{3}:

'ஷஷ்டி' முதலியவைகளுக்கு முன் வேறு எண்ணுப் பெயர் நிற்காமலிருந்தால்,

'தமட்' ஆகமம் 'டட்' ஒட்டுக்கு முன், ஷஷ்டி முதலியவைகளுக்குப்பின் கட்டாயமாக வரும்.
ஷஷ்டிதம:, ஸப்ததிதம:
ஆனால் ஏகஷஷ்ட: அல்லது ஏகஷஷ்டிதம: (5.2.56)

5.2.59 மதௌ ச²: ஸூக்த ஸாம்னோ:
ஸூக்தம், ஸாமன் ஆகியவற்றைச் சுட்ட, பிராதிபதிகத்துக்குப்பின், ச² (ஈய) ஒட்டு 'மதுப்' ஒட்டின் (5.2.94) பொருளில் வரும்.
அச்சாவாகீயம் ஸூக்தம் – 'அச்சாவாக என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கும்'
சூக்தம், மித்ராவாருணீயம்
யக்³ ஞாயக்ஞீயம் ஸாம

5.2.60 அத்⁴யாயானுவாகயோர் லுக்
அத்யாயம், அனுவாகம் ஆகியவைகளைச் சுட்டும்போது, பிராதிபதிகத்துக்குப்பின் வரும் 'மதுப்'பின் பொருளைக் குறிக்கும் ஒட்டான 'ச²' கெடும்.
க³ர்த³ ப⁴ாண்டோ அத்யாய: அல்லது
அனுவாக: க³ர்த³ பாண்டீய:
தீ³ர்க⁴ ஜீவித: அல்லது தீ³ர்க⁴ஜீவீய:

5.2.61 விமுக்தாதி³ப்⁴யோ அண்
மேலே கூறப்பட்ட சூழலில், விமுக்த முதலிய சொற்களுக்குப் பின், 'மதுப்' ஒட்டின் பொருளில் 'அண்' வரும்.
வைமுக்த அத்யாய:/அனுவாக:
தைவாஸூர அத்யாய:/அனுவாக:

5.2.62 கே³ாஷத⁴ாதி³ப்⁴யே வுன்
'கோஷத' முதலிய சொற்களுக்குப்பின் 'வுன்' ஒட்டு 'மதுப்' ஒட்டின் பொருளில் அத்யாயம் அல்லது அனுவாகம் என்பதைக் குறிக்க வரும்.
கோஷத³கோ அத்யாய:/அனுவாக:
மாதரிஸீவக: அத்யாய:/அனுவாக:

5.2.63 தத்ர குஸ'ல: பத²:
7ஆம் வேற்றுமையிலமையும் பதி²ன் என்ற சொல்லுக்குப்பின் 'வுக' ஒட்டு 'அதில் திறமையுள்ளவன் அல்லது தேர்ச்சி பெற்றவன்' என்ற பொருளில் வரும்.
பத²க: (பதி²ன +வுன் = பத்² + வுன் (6.4.144) = பதி² + அக 7.1.1)

5.2.64 ஆகர்ஷாதி^{3}ப்^{4}ய: கன்

'ஆகர்ஷ' முதலிய ஏழாம் வேற்றுமைச் சொல்லுக்குப்பின் 'கன்' ஒட்டு மேலே கூறிய பொருளில் வரும்.

ஆகர்ஷக:, த்ஸருக:

5.2.65 த^{4}ன ஹிரண்யாத் காமே

ஏழாம் வேற்றுமையிலமையும் த^{4}ன, ஹிரண்ய என்ற சொற்களுக்குப்பின் 'கன்' ஒட்டு, 'அதன் மேலே ஆசை' என்ற பொருளில் வரும்.

த^{4}னக: 'செல்வத்தை விரும்புபவன்'

ஹிரண்யக: 'தங்கத்தை விரும்புபவன்'

5.2.66 ஸ்வாங் கே^{3}ப்^{4}ய: ப்ரஸிதே

7ஆம் வேற்றுமையிலமையும் உடலின் ஒருறுப்பைச் சுட்டும் சொல்லுக்குப்பின் 'கன்' ஒட்டு, 'அதைக் கவனித்துக் கொள்கிறான்' என்ற பொருளில் வரும்.

கேஸக: 'தலை முடியைக் கவனித்துக் கொள்பவன்'

கேஸ^{1}நக^{2}க, தந்தௌஷ்டக:

5.2.67 உத^{3}ராட்ட^{2}க் ஆத்^{3}யதே

7ஆம் வேற்றுமையிலமையும் உதர, 'வயிறு' என்ற சொல்லுக்குப்பின் 'டஞ்' ஒட்டு, 'பெருந்திண்டி தின்கிற' அதிகப் பசியுள்ள' என்ற பொருளில் வரும்.

ஔத^{3}ரிக: (அதாவது ஆத்^{3}ன:)

'அதிகப் பசியுள்ளவள்'

ஆனால் உதரக: 'வயிற்றைப் பற்றிய'

5.2.68 ஸஸ்யேன பரிஜாத:

மூன்றாம் வேற்றுமையிலமையும் ஸஸ்ய என்ற சொல்லுக்குப்பின் 'கன்' ஒட்டு 'மிகச் சிறந்த' என்ற பொருளில் வரும்.

ஸஸ்யக: ஸாலி: 'நல்ல அரிசி'

வஸ்யக: மணி: 'சிறப்பான ரத்னம்'

5.2.69 அம்ஸம் ஹாரீ

இரண்டாம் வேற்றுமையிலமையும் 'அம்ஸ 'பாகம்' என்ற சொல்லுக்குப்பின் 'கன்' ஒட்டு 'அதை எடுத்துக் கொள்பவன்' என்ற பொருளில் வரும்.

அம்ஸ^{1}க: வாரிசு, அம்ஸக: புத்ர

'சொத்தின் பாகம்பெற உரிமையுள்ளவன்'

5.2.70 தந்த்ராத் அசிராபஹ்ருதே

ஐந்தாம் வேற்றுமையிலமையும் தந்த்ர 'தறி' என்ற சொல்லுக்குப்பின் 'கன்' ஒட்டு 'அண்மையில் அதிலிருந்து எடுக்கப்பட்டது' என்ற பொருளில் வரும்.

தந்த்ரக: பட: 'தறியிலிருந்து அண்மையில் எடுக்கப்பட்ட துணி, வெளுக்காத

துணி'
தந்த்ர: ப்ராவார: 'புது உடை'

5.2.71 ப்ராஹ்மய கோஷ்ணிகே ஸம்க்^{3}ஞாயாம்
ப்ராஹ்மணக, உஷ்ணிக என்ற சொற்கள் பெயரைச் சுட்டும்போது நிபாதனமாகும்.
ப்^{3}ராஹ்மணகோ தே^{3}ஸ^{1}: 'பிச்சை எடுத்துப் பிழைக்கும் பிராம்மணர்கள் வசிக்குமிடம்'
உஷ்ணிகாயவாசு^{3}:

5.2.72 ஸீதோஷ்ணாப்^{4}யாம் காரிணி
ஸீத 'குளிர்' உஷ்ண 'சூடு' ஆகியவற்றிற்குப்பின் 'க்ன்' ஒட்டு அதைச் செய்பவன்' என்ற பொருளில் வரும்.
ஸீதக: 'சோம்பேறி'
உஷ்ணக: 'சுறுசுறுப்பாக வேலை செய்பவன், திறமைசாலி'

5.2.73 அதி^{4}கம்
அதி^{4}கம் 'நிறைய', மிகுதி' என்ற சொல் நிபாதனம்.
அத்^{4}யாரூட^{4}: கன் அதி^{4}க: (ஆரூட கெடும்)
அதி^{4}கோ த்^{3}ரோண: க^{2}ார்யாம்
க^{2}ாரியைவிட த்^{3}ரோன பெரியது

5.2.74 அனுகாபி^{4}கா பீ^{4}க: கமிதா
'கன்' ஒட்டிணைத்தாக்கப்பட்ட சொற்களான அனுக, அபி^{4}க, அபி^{4}களன்ற சொற்கள் 'விரும்புகிற, இச்சைப்படி நடக்கிற' என்ற பொருளின் நிபாதனங்களாகும்.

5.2.75 பார்ஸ்வேனாம் விச்^{1}ச^{2}தி
மூன்றாம் வேற்றுமையிலமையும் பார்ஸ்வ 'வளைந்த பொருள்' என்ற சொல்லுக்குப்பின் 'கன்' ஒட்டு 'அதனால் ஒன்றையடைய முயல்கிறான்' என்ற பொருளில் வரும்.
பார்ஸ்லக: 'ஏமாற்றுபவன், கண்கட்டு வித்தைக்காரன்'

5.2.76 அய: ஸூல தண்டாஜினாப்யாம் ட^{2}க்ட^{2}ஞௌ
அய: ஸூலிக: 'பலாத்கார முறையில் ஒன்றையடைய முயல்பவன்'
தண்டாஜினிக: வெளிவேஷம் அல்லது பாசாங்கு செய்து ஒரு பொருளையடைய முயல்பவன்'

5.2.77 தாவதித^{2}ம் க்^{3}ரஹணம் இதி லுக்^{3} வா
'பல தடவை முயற்சி செய்து ஒரு பொருளையடைதல்'

என்ற பொருளில் 'கன்' ஒட்டு எண்ணுப் பெயருக்குப்பின் வரும். அவ் வொட்டு விருப்பாகக் கெடும்.
த்^{3}விகம் க்^{3}ரஹணம் அல்லது த்விதீயகம் க்^{3}ரஹணம்
'இரண்டாவது முயற்சியில் அந்த அறிவைப் பெறுதல்.
இரண்டாவது தடவையில் வெற்றிகரமாக அதில் திறமை பெற்றான்.

வா: தாவதிதே^{2}ன க்^{3}ருஹ்ணாதி இதி வக்தவ்ய: பூரண ப்ரத்யயஸ்ய நித்யம் லுக்.
'கன்' ஒட்டிணைத்து ஆக்கப்பட்ட சொல், பல தடவை முயற்சி செய்து அவ்வறிவு பெற்ற ஆள் என்ற பொருளைச் சுட்டும்போது 'பூரண (எண் வரிசை முறை சுட்டும்) ஒட்டு கட்டாயமாக கெடும்.
ஷட்க: தேவதத்த: ஆறு முறை முயற்சி செய்து அப்புத்தகத்தைப் புரிந்து கொண்டவன் தேவதத்தன்.

5.2.78 ஸ ஏஷாம் க்^{3}ராமணி:
முதல் வேற்றுமைச் சொல்லுக்குப்பின் 'க' ஒட்டு, 'அவன் அவர்களுடைய கிராமத் தலைவன்' என்ற பொருளில் வரும்.
தே^{3}வத^{3}த்தகா: 'அவர்களுடைய கிராமத் தலைவன் தேவதத்தன்'

5.2.79 ஸ்^{1}ருங்க^{2}லம் அஸ்ய ப^{3}ந்தனம் கரபே^{4}
முதல் வேற்றுமையிலமையும் ஸ்ருங்க^{2}ல என்ற சொல் லுக்குப்பின் 'கன்' ஒட்டு 'இது அதன் கால் சங்கிலி, விலங்கு' என்ற பொருளில் வரும். ஆக்கப்பட்ட சொல் ஒட்டகத்தின் குட்டியென்று பொருள்படும்.
ஸ்ருங்க^{2}லக: 'கால் சங்கிலி, இதன் தடை. அதாவது ஒட்டகக் குட்டி'

5.2.80 உத்க உன்மான:
'உத்'தோடு 'கன்' ஒட்டுச் சேர்த்து ஆக்கப்பட்ட சொல்லான 'உத்க' 'ஏங்கு', ஆவலுடன் விரும்பு' என்ற பொருளில் நிபாதனமாகும்.
உத்க: தேவதத்த: உத்ஸிக: ப்ரவாஸீ

5.2.81 காலப்ரயோஜனாத்^{3}ரோகே
காலம் அல்லது காரணம் அல்லது விளைவைக் குறிக்குஞ் சொல்லுக்குப்பின் 'கன்' ஒட்டு, ஆக்கப்பட்ட சொல், ஒரு நோயைக் குறிக்கும்போது வரும்.
த்^{3}வித்'யக: ஜ்வர: 'ஒரு நாள் விட்டு ஒருநாள் வரும் காய்ச்சல்'
விஷ்புஷ்பக: ஜ்வர: விஷப்பூவினால் ஏற்படும் காய்ச்சல் (ப்ரயோஜனம்)
உஷ்ணக: சூடு உண்டாக்கும் காய்ச்சல்

5.2.82 தத^{3}ஸ்மின் அன்னம் ப்ராயே ஸம்க்^{3}ஞாயாம்
முதல் வேற்றுமையிலமையும் 'உணவு' என்ற சொல்லுக்குப் பின் 'கன்' ஒட்டு 'இது குறிப்பிட்ட காலத்துக்குரிய குறிப்பிட்ட உணவு' என்ற பொருளில் வரும்.

தருவிக்கப்பட்ட சொல் ஒரு பெயராகும்.
கு[3]டாபூபிகா பௌர்ணமாஸீ–'வெல்லத்தினால் தயாரிக்கப்பட்ட ஆப்பம் உண்ணவேண்டிய பௌர்ணமி'
திலா பூபிகா பௌர்ணமாஸீ.

வா: வடகேப்[4]ய: இனி வக்தவ்ய:
'வடக'வுடன் 'இனி' ஒட்டு அதே பொருளில் வரும்.
வடகீனீ பௌர்ண்மாஸீ

5.2.83 குல்மாஷாத் அஞ்
'குல்மாஷ' என்ற சொல்லுக்குப்பின் 'அஞ்' ஒட்டு மேலே கூறிய பொருளில் வரும்.
கௌல்மாஷு பௌர்ணமாஸீ

5.2.84 ஸ்ரோத்ரியன் ஸ்ச[2]ந்தே[3]ா அதீ[4]தே
'வேதம் படிப்பவன்' என்ற பொருளில் 'ஸ்ரோத்ரியன்' என்ற சொல் நிபாதனமாகும்.
ஸ்ரோத்ரியோ ப்[3]ராஹ்மண:
'வேதம் படித்த பிராம்மணன்'
'ஸ்ரோத்ரியன்' இனின் இறுதி 'ன்' சுரத்துக்காக.

5.2.85 ஸ்ராத்[3]த[4]மனேன பு[4]க்தமினி ட[2]னௌ
'ஸ்ராத்[3]த[4]' என்ற சொல்லுக்குப்பின் இனி (இன்), டன் (இக), என்ற வொட்டுக்கள் 'அவனால் இது உண்ணப்பட்டது' என்ற பொருளில் வரும்.
ஸ்ராத்[3]தீ[4] அல்லது ஸ்'ராத்[3]தி[4]க:
'ஸ்ராத்தம் உண்டவன்'

5.2.86 பூர்வாத் இனி:
'பூர்வ'வுக்கு முன் 'இனி' ஒட்டு 'அவனால் முன்பு செய்யப்பட்டது' என்ற பொருளில் வரும்.
பூர்வீ 'முதலில் சென்றவன்'

5.2.87 ஸபூர்வாச் ச
மேலே கூறிய பொருளில், 'பூர்வ' என்ற சொல் மற்றொரு சொல்லைத் தொடர்ந்து நிற்கும்போதும் 'இனி' ஒட்டு வரும். க்ருத பூர்வீ கடம்–'முன்பு பாய் செய்பவன்'

5.2.88 இஷ்டாதிப்[4]யஸ் ச
'இஷ்ட' முதலியவைகளுக்குப்பின்னும் 'இனி' ஒட்டு மேலே கூறிய பொருளில்

வரும்.
இஷ்டீ யக்3ஞே 'யாகம் பண்ணினவன்', பூர்த்தீ ஸ்'ராத்3தே4

5.2.89 ச2ந்த3ஸி பரிபந்தி2 பரிபரிணௌ பர்யவஸ்த2ரி
பரிபந்தி2ன், பரிபரின் ஆகிய சொற்கள் வேத மொழியில் (இனி ஒட்டு இணைத்து ஆக்கப்பட்ட) எதிரி என்ற பொருளில் நிபாதனமாகும்.
மா த்வா பரிபந்தி2னோ விதன்
மா த்வா பரிபரிணோ விதன்
'உனது பகைவர்கள் உன்னைத் தெரிந்து கொள்ளாமலிருக்கட்டும்'

5.2.90 அனுபதி3 அன்வேஷ்டோ
'தொடர்ந்து செல், தேடு' என்ற பொருளைச் சுட்டும் 'இனி' ஒட்டிணைத்து ஆக்கப்பட்ட' 'அனுபதின்' என்ற சொல் நிபாதனமாகும்.
அனுபதீ க3வாம்–பசுவைத் தொடர்ந்து செல்பவன்'

5.2.91 ஸாக்ஷாத் த்3ரஷ்டரி ஸம்க்3ஞாயாம்
'ஸாக்ஷாத்' என்ற சொல்லுக்குப்பின் 'இனி' ஒட்டு 'பார்வையாளர்' என்ற பொருளில் வரும். அது ஒரு பெயராகும்.
ஸாக்ஷீ–'நேரில் பார்த்தவர். சாட்சி'

5.2.92 க்ஷேத்ரியச் பரக்ஷேத்ரே சிகித்ஸ்ய:
வேறு உடலில் (பரக்ஷேத்ரே) குணப்படுத்த இயலும் (சிகித்ஸ்ய) என்ற பொருளைச் சுட்டும் 'க்ஷேத்ரியச்' என்ற சொல் ஒரு நிபாதனம்.
க்ஷேத்ரிய: வ்யாதி4: 'குணப்படுத்த முடியாத நோய்'
அதாவது, இந்த ஜன்மத்தில் குணப்படுத்த முடியாதது:
க்ஷேத்ரியம் குஷ்டம்

5.2.93 இந்த்3ரியம் இந்த்3ர லிங்கம் இந்த்3ர த்3ருஷ்டம்
இந்த்3ரஸ்ஷ்டம் இந்த்ர3ஜூஷ்டம் இந்த்3ர 3தத்தமதி வா 'இந்த்3ரியம்' என்ற சொல் ஒரு நிபாதனமாகும். அதன் பொருட்கள் வருமாறு (1) அதனால் தன்னை யூகித்தல் (இந்த்ரலிங்கம்) (2) தன்னால் பார்க்கப்பட்டது (இந்த்3ர'த்3ருஷ்டம்) (3) தன்னால் உண்டாக்கப்பட்டது (இந்த்ரஸ்ருஷ்டம்) (4) தன்னால் வளர்க்கப்பட்டது (இந்த்ரஜூஷ்டம்) (5) தன்னால் கொடுக்கப்பட்டது (இந்த்3ரதத்தம்) (6)

5.2.94 தத3ஸ்யாஸ்த்யஸ்மின்னிதி மதுப்
முதல் வேற்றுமைச் சொல்லுக்குப்பின் 'மதுப்' ஒட்டு, 'அது அவனுடையது, அது அவனிடமிருக்கிறது' என்ற பொருளில் வரும்.
மதுப் ஒட்டு கிழமைப் பொருளில் வரும்.
கோமத்–பசுவுடையவன்

வ்ருக்ஷவான் பர்வத: 'மரங்களையுடைய மலை'
'மதுப்' ஒட்டு கீழ்க்கண்ட பொருட்களில் பயன்படுத்தப்படும்.
1) பூமன–'மிகுதி' கோமான் 'பசுவளமுள்ள'
2) நிந்தா 'நிந்தனை' குஷ்டி
3) ப்ரஸம்ஸா 'புகழ்ச்சி' ரூபவதி 'அழகான'
4) நித்யோக 'இயற்கையாயமைபப்பெற்ற' க்ஷீரிணோ வ்ருக்ஷ: 'சாறுள்ள மரம்'
5) அதிஸாயன–அதிகமாகவுள்ள, உதரிணீ கன்யா 'சூலுற்ற பெண்'
6) ஸம்ஸர்க[3] 'உடனிருத்தல்' தண்டின் 'தண்டத்தை வைத்துக் கொண்டிருப்பவன்'
7) அஸ்திவிவக்ஷா–'இருத்தல் என்ற உணர்வு 'அஸ்திமத்–பொருளுடைய வன்

வா: குணவசனேப்[4]யோ மதுப் லுக் வக்தவ்ய
குணத்தைக் குறிக்குஞ் சொல்லுக்குப்பின் நிற்கும் 'மதுப்' ஒட்டு கெடும்.
ஸுக்ல: பட: வெளுத்த ஆடை
க்ருஷ்ண:

5.2.95 ரஸாதி[3]ப்யஸ்[1] ச
'ரஸ' முதலியவைகளுக்குப்பின்னும் 'மதுப்' ஒட்டு மேற்கூறிய பொருளில் வரும்.
ரஸவான், 'சாறுள்ள', ரூபவான் 'அழகுடையவன்'

5.2.96 ப்ராணிஸ்த[2]த[3]தோ லஜன்யதரஸ்யாம்
உயிரினங்களில் காணப்படுமொன்றைக் குறிக்கும் 'ஆ' வீற்றுச் சொல்லுக்குப்பின் 'லச்' ஒட்டு 'மதுப்' ஒட்டின் பொருளில் விருப்பாக வரும்.
சூடால:, சூடாவான் 'குடுமியுள்ளவன்'
கர்ணிகால:, கர்ணிகாஸான்–நீண்டகாதுகளையுடைவன்'
ஆனால் ஸிகாவான் ப்ரதீப: (உயிரினமல்ல); ஹஸ்தவான், 'ஆ' வீற்றுச் சொல்லல்ல)

வா: ப்ராணி அங்காதிதி வக்தவ்யம்
உயிரினங்களின் உறுப்புக்குப் பின் மட்டும் இவ்வொட்டு வரும். ஆகையால் அன்பு, அறிவு ஆகியவைகளுடன் 'லச்' வராது.
'மத்'தான் வரும். சிகீர்ஷாவான்.

5.2.97 ஸித்[4]மாதி[3]ப்[4]யஸ்[1] ச
'ஸித்[4]ம' முதலியவைகளுக்குப்பின்னும், 'லச்' ஒட்டு, 'மதுப்' பின் பொருளில் விருப்பாக வரும்.
ஸித்[4]மல: அல்லது ஸித்[4]மவான்
குஷ்டரோகி

க3டு3ல: (அ) க3டு3மான் 'கனி'

வா: பார்ஷ்வி த4ன்யோர் தீர்க4ஸ்1 ச
'ல'வுக்குமுன், பார்ஷ்ணி, தமனியின் இறுதி உயிர் நெடிலாகும்.
பார்ஷ்ணீல, த4மனீல

வா: வாத தந்த ப3ல லலாடானாமூங்
'வாத' முதலியவைகளுக்குப்பின், 'ஊங்' 'ல' ஒட்டுக்கு முன் வரும்.
வாதூல:, தந்தூல:, ப3லூல:, லலாடூல:

வா: ஜடா க4டா கலா: க்ஷேபே
நிந்தனையைச் சுட்டும்போது 'லச்' ஒட்டு ஜடா முதலியவைகளுக்குப்பின் வரும்.
ஜடால:, க4டால:, கலால:
ஆனால் ஜடாவான் தாபஸ: (நிந்தனையைச் சுட்டவில்லை)

வா: க்ஷுத்3ர ஜந்து உபதாபயோஸ் ச இஷ்யதே 'லச்' ஒட்டு,
சிறு பிராணிகளைக் குறிக்குஞ் சொற்கள், வியாதிகளைக் குறிக்குஞ் சொற்கள் ஆகியவைகளுக்குப்பின்னும் வரும்.
யூகால:, மக்ஷிகால:
சிசர்சிகால:, மூர்ச2ால:

5.2.98 வத்ஸா ம்ஸாப்4யாம் காமாப3லே
வத்ஸ 'கன்று', அம்ஸ 'தோள்' ஆகிய சொற்களுக்குப்பின் 'லச்' ஒட்டு முறையே 'அன்பு', 'பலம்' என்ற பொருட்களில் வரும்.
வத்ஸல: 'அன்பான'
அம்ஸல: 'பலம் பொருந்திய'
ஆனால் வத்ஸவதீ கெ3ள: 'கன்று உடைய பசு'
அம்ஸவான் து3ர்ப3ல: 'பலவீனமான தோள்களையுடையவன்'
இங்கு 'மத்' ஒட்டுத்தான் கட்டாயமாக வரும்.

5.2.99 பே2னாதி3லச் ச
பேன 'நுரை'வுக்குப்பின் 'இலச்' ஒட்டும் 'மதுப்' பின் பொருளில் வரும்.
பே2னில:, பே2னல: 'நுரையுள்ள'

5.2.100 லோமாதி பாமாதி பிச்சாதி3ப்4ய: ஸனேலச:
'லோம' முதலியவைகள், 'பாம' முதலியவைகள் 'பிச்'ச2' முதலியவைகளுக்குப்பின் முறையே, ஸ, ன, இலச் ஒட்டுக்கள் 'மதுப்'பின் பொருளில் வரும்.
'மதுப்'பும் விருப்பாக வரும்.

லோமஸ:, லோமவான் 'ரோசமுள்ள'
பாமன:, பாமவான் 'சொறிபிடித்துள்ள'
பிச்சி²ல:, பிச்சி²வான் 'சாறுள்ள'

5.2.101 ப்ரக்³ஞா ஸ்'ரத்³த⁴ா அர்ச்சா வ்ருத்திப்⁴யோண:

'மதுப்'பின் பொருளில் ண (அ) ப்ரக்³ஞா, ஸ்ரத்³த⁴ா, அர்சா, வ்ருத்தி என்ற சொற்களுக்குப்பின் வரும்.
'மதுப்'பும் இவைகளுடன் வரும்.
ப்ராக்³ஞ: அல்லது ப்ரக்ஞாவான் 'அறிவாளி'
ஸ்ராத்³த⁴: (அ) ஸ்ரத்³த⁴ாவான் 'நம்பிக்கையுடையவன்' ஆர்ச: (அ) அர்சாவான் 'கடவுளின் மூர்த்தியையுடையவன்' வார்த்த: (அ) வ்ருத்திமான் 'வாழ வசதியுடையவன்'

5.2.102 தப: ஸஹஸ்ராப்⁴யாம் வினீர்

தபஸ், ஸஹஸ்ர என்ற சொற்களுக்குப்பின் முறையே வினி, நினி என்ற ஒட்டுக்கள் 'மதுப்'பின் பொருளில் வரும்.
தபஸ்வின் – இருடி
ஸஹஸ்ரின் – ஆயிரமுடையவன்

5.2.103 அண் ச

தபஸ், ஸஹஸ்ர,வுடன் அண் ஒட்டும் வரும்.
தாபஸ: 'இருடி', ஸாஹஸ்ர: 'ஆயிரமுடையவன்'

வா: அண் ப்ரகரணே ஜ்யோத்ஸ்னாதி³ப்⁴ய உபஸம்க்²யானம்
'ஜ்யோத்ஸ்னா' முதலியவைகளுடன் 'அண்' ஒட்டு வரும்.
ஜ்யௌத்ஸ்ன: பக்ஷ:
தாமிஸ்ர: கௌண்டல:

5.2.104 ஸிகதா ஸர்கராப்⁴யாம் ச

ஸிகத, ஸர்கரா என்ற சொற்களுக்குப்பின்னும் 'அண்' ஒட்டு 'மதுப்' பின் பொருளில் வரும்.
ஸைகதோ க⁴ட: 'மணற்பானை'
ஸார்கரம் மது⁴: 'தேன்'

5.2.105 தே³ஸே'லுபி³லசௌ ச

ஸிகத, ஸர்கரா ஆகியவைகளுடன் இணைக்கப்பட்ட மதுப்பின் பொருளைச் சுட்டும் ஒட்டு, ஆக்கப்பட்ட சொல், ஒரு இடத்தைக் குறிக்குமானால் கெடும். அல்லது, இச்சொற்களுடன் 'இலச்' ஒட்டும் அண், மதுப் ஒட்டுக்களும் வரும்.
ஸிகதா தேஸ:, ஸிகதில:, ஸைகத: ஸிகதாவான் – 'மணல் நிறைந்த இடம்'
ஸர்கரா தேஸ:, ஸர்கரில:, ஸார்கர: ஸர்கராவான் – 'கல் நிறைந்த இடம்'

5.2.106 த^{3}ந்த உன்னத உரச்

தந்த 'பல்' என்ற சொல்லுக்குப்பின் உரச் (உர) ஒட்டு, 'நீண்டபல்லைக் கொண்ட' என்ற பொருளில் வரும்.

தந்துர: நீண்ட பல்லுடையவன்'

ஆனால் தந்தாவான் – பல்லுடையவன்

5.2.107 ஊஷ ஸுஷி முஷ்க மதே^{4}ா: ர:

ஊஷ, ஸுஷி, முஷ்க, மது^{4} என்பவைகளுடன் 'மதுப்'பின் பொருளில் 'ர' ஒட்டு வரும்.

ஊஷரம் க்ஷேத்ரம் 'உப்பார்ந்த நிலம்'

ஸுஷிரம் காஷ்டம் 'ஓட்டையுள்ள விறகு'

முஷ்கர: பஸு: விதையுடைய

மது^{4}ரோ கு^{3}ட: இனிப்பான

வா: ரப்ரகாலஸே க^{2}முக^{2} குஞ்ஜேப்^{4}ய: உபஸம்க்^{2}யானம் க^{2}, முன^{2}, குஞ்ஜ என்ற சொற்களுக்குப்பின்னும் 'ர' ஒட்டு வரும்.

க^{2}ர: 'கழுதை' அகன்ற தொண்டையுடைய'

முக^{2}ர: வாயாடி

குஞ்ஜர: யானை, தந்தங்களையுடைய

வா: நக^{3}பாம்ஸு பாண்டுப்சயண்சேதி வக்தவ்யம்

நக, முதலியவைகளுக்குப்பின்னும் 'ர' வரும்.

நகரம், பாண்ஸுரம், பாண்டுரம்

வா: கச்ச^{2}வா ஹ்ரஸ்வத்வம் ச

'கச்சு^{2}'வுடன் இவ்வொட்டு வரும்போது உயிரெழுத்து குறுகும் கச்'சு^{2}ரம்

5.2.108 த்^{3}யு, த்^{3}ருப்^{4}யாம் ம:

'மதுப்'பின் பொருளில் 'ம' ஒட்டு த்^{3}யு, த்^{3}ருவுக்குப்பின் வரும்.

த்^{3}யுன்: 'பளபளப்பான'

த்^{3}குக: 'மரங்'களையுடைய

5.2.109 கேஸாத்^{1} வோ அன்யதரஸ்வாம்

'கேஸ'த்துக்குப்பின் 'வ' ஒட்டு 'மதுப்'பின் பொருளில் விருப்பாக வரும்.

கேஸவ:, கேஸரீ, கேஸிக:, கேஸிவான் 'மயிருடைய'

வா: வப்ரகரணே அன்யேப்^{4}யோ அபி த்^{3}ருஸ்யத இதி வக்தவ்ய:

மற்ற சொற்களோடும் 'வ' ஒட்டு வரும்.

மணிவ: ஒருவகைப் பாம்பு. ஹிரண்யவ: ஒருவகை ரத்னம். ராஜீவம்

வா: m®z b[hnyhg° ' ச

'அர்ணஸ'' என்ற சொல்லின்னிறுதியெழுத்தான 'ஸ' இவ்வொட்டுக்குமுன் கெடும்.

அர்ணவ: 'கடல்'

வா: ச2ந்த3ஸீ வனிபௌ ச

வேதமொழியில் வனிப், ஒட்டு வரும். ஈ, வ, மதுப் ஆகியவைகளும் வரும்.

ஈ – ரத்2ரபன் முத்3கலானீ க3விஷ்டௌ ஸுமங்கலீரியம் வதூ4:

வனிப் – மக4வானமீமஹே

வ, மதுப் – உத்3வா, உத்3வத்

வா: மேத4ாரத2ாப்4யாமி ரன்னிரசௌ வக்தவ்யௌ

மேதசா, ரத என்ற சொற்களுக்குப்பின் முறையே இரன், இரச் ஒட்டுக்கள் 'மதுப்'பின் பொருளில் வரும்.

மேதி4ர:, ரதி2ர:

5.2.110 க3ாண்ட்யஜக3ாத் ஸம்க்ஞாயாம்

க3ாண்டி3, அஜக3 என்ற சொற்களுக்குப்பின் 'மதுப்' ஒட்டின் பொருளில் வரும், ஆக்கப்பட்ட சொல் ஒரு பெயராகும்.

க3ாண்டீவம் – 'அர்சுனனின் வில்லின் பெயர்'

அஜக3வம் – சிவனின் வில்லின் பெயர்

5.2.111 காண்ட3ாண்ட3ாத் ஈரன் ஈரசௌ

ஈரன் (ஈர), ஈரச் (ஈர) ஒட்டுக்கள், முறையே காண்ட, அண்ட என்ற சொற்களுக்குப்பின் 'மதுப்'பின் பொருளில் வரும்.

காண்டீர: 'கணுக்களையுடைய தண்டு', அண்டீர: முட்டையுடைய'

5.2.112 ரஜ: க்ருஷ்யாஸுதி பரிஷதோ வலச்

வலச் (வல) ஒட்டு, 'மதுப்'பின் பொருளில் ரஜஸ், க்ருத்ஷி, ஆஸுதி, பரிஷ என்ற சொற்களுக்குப்பின் வரும்.

ரஜஸ்வலா ஸ்த்ரீ – 'மாதவிடாயிலுள்ள பெண்'

க்ரஷீவல: குடும்பீ3 – 'உழவன்'

ஆஸுதிவல: ஸௌண்டிக: 'சாராயங் காய்ச்சுபவன்'

பரிஷத்வலோ ராஜா: 'சபையினுறுப்பினர்'

வா: வலச் ப்ரகரணே அன்யேப்4யோ அபி3த்ருஸ்'யத இதி வக்தவ்யம்

மற்ற சொற்களோடும் 'வலச்' ஒட்டு வரும். ப்4ராத்ருவல:, உத்ஸாஹவல:

5.2.113 த3ந்தஸிக2ாத் ஸம்க்3ஞாயாம்

த3ந்த, ஸிக2ா என்ற சொற்களுக்குப்பின் 'வலச்' ஒட்டு 'மதுப்'பின் பொருளில்

வரும். ஆக்கப்பட்ட சொல் ஒரு பெயரைச் சுட்டும்.

த^{3}ந்தாவல: 'யானை', ஸிக^2ாவலம் 'மயில்' 'தந்த' என்ற சொல்லின் இறுதி உயிர் 'அ' 'வல' ஒட்டுக்கு முன் 'ஆ' வாகும் (6.3.118).

5.2.114 ஜ்யோத்ஸ்னா தமிஸ்ரா ஸ்ருங்கிணோர் ஜஸ்வின்னூர் ஜஸ்வல கே^{3}ாமின் மலின மலீமஸா:

ஜ்யோத்ஸ்னா, தமிஸ்ரா, ஸ்ருங்கின, ஊர்ஜஸ்வின், ஊர்ஜஸ்வல, கோமின், மலின, மலீமஸ என்ற சொற்கள் 'மதுப்' பொருளில் விதிக்குப்புறம்பாக ஆக்கப்பட்டவை.

ஜ்யோதிஷ் + ன = ஜ்யோத்ஸ்னா, 'நிலா'

தமிங் + ர = தமிஸ்ரா 'இரவு'

ஸ்ருங்க + இனச் = ஸ்ருங்கின: 'கொம்புள்ள'

ஊர்ஜ + அஸுக் = வினி/வலச் + ஊர்ஜஸ்வின், ஊர்ஜஸ்வல, 'பலமுள்ள'

கோ + மினி = கோமின் 'மாடுகளுடைய'

மல + இனச் = மலின: 'அழுக்கான'

மல + ஈமஸச் = மலிமஸ: 'அழுக்கான'

5.2.115 அத இனிட^{2}னௌ

'அ' ஈற்றுச் சொற்களுக்குப்பின், இனி, டன், ஒட்டுக்கள் 'மதுப்'பின் பொருளில் வரும்.

தஸ்டீ^{3}, தண்டி^{3}க:, தண்டவான், 'தண்டத்தைக் கொண்ட' ச^{2}க்ரீ, ச^{2}த்ரிக:, ச^{2}த்ரவான் – குடையுடைய

5.2.116 வ்ரீஹ்யாதி^{3}ப்^{4}யஸ்' ச

'ப்ரீஹி' முதலியவைகளுக்குப்பின்னும் 'மதுப்'பின் பொருளில் மேலே கூறிய ஒட்டுக்கள் வரும்.

வ்ரீஹீ, வ்ரீஹிக:, வ்ரீஹிவான் 'அரிசியுள்ள'

5.2.117 துந்த^3ாதி^{3}ப்^{4}ய: இலச்ச

'இலச்' ஒட்டு 'மதுப்'பின் பொருளில் 'துந்த^3' முதலிய சொற்களுக்குப்பின் வரும் மற்ற வொட்டுக்களும் வருமென்று 'ச' சுட்டுகிறது.

துந்தி^{3}ல: துந்தீ, துந்தி^{3}க: துந்த^{3}வான் 'துருத்திக் கொண்டிருக்கும் வயிறுடைய'

உத^{3}ரில:, உத^{3}ரீ, உதரிக:, உதரவான் 'பெருவயிறுடைய'

5.2.118 ஏக கோ^{3}பூர்வாட் ட^{2}ஞ் நித்யம்

ஏக, கே^{3}ா ஆகியவைகள் முதலுறுப்பினராகக் கொண்ட பிராதி பதிகத்துக்குப்பின் கட்டாயமாக 'ட^{2}ஞ்' ஒட்டு 'மதுப்'பின் பொருளில் வரும்.

ஐகஸதிக: 'ஒரு நூறு உடையவன்'

கௌஸதிக: 'நூறு பசுக்களையுடையவன்'

5.2.119 ஸத ஸஹஸ்ராந்தாச் சநிஷ்காத்

'நிஷ்க'த்தைத் தொடர்ந்து நிற்கும் ஸத, ஸஹஸ்ர என்ற சொற்களுக்குப்பின் 'மதுப்'பின் பொருளில் 'டஞ்' ஒட்டு வரும்.

நைஷ்கஸதிக:, நைஷ்க ஸஹஸ்ரிக:

5.2.120 ரூபாத^{3}ஹத ப்ரஸம்ஸயோர் யப்

யப்(ய) ஒட்டு, 'ரூப' என்ற சொல்லுக்குப்பின் 'மதுப்'பின் பொருளில் வரும். அது முத்திரையிடுதல் அல்லது புகழ்தல் என்ற பொருளைச் சுட்டும்.

ரூப்யோ த்^{3}னார: 'ஒரு அரசனின் முத்திரையிட்ட தீனார' ரூப்யம் கேதார:

ரூப்ய: புருஷ: 'அழகான மனிதன்'

வா: யப் ப்ரகரணே அன்யேப்^{4}யோ அபி த்^{3}ருஸ்யத இதி வக்தவ்யம்

ஹிம்யா: பர்வதா: 'பனியுடைய மலை'

குண்யா ப்^{3}ராம்மணா

5.2.121 அஸ் மாயா மேத^4ா ஸ்ரஜோ வினி

'அண்'ஐ யிறுதியில் கொண்ட சொற்கள், மாயா, மேத^4ா, ஸ்ரஜ் ஆகியவைகளுக்குப்பின் வினி ஒட்டு, 'மதுப்'பின் பொருளில் வரும்.

யஸஸ்வீ 'புகழ்வாய்ந்த', தபஸ்வீ 'இருடி'

பயஸ்வீ – 'பால் (அ) தண்ணீர் நிறைந்த'

மாயாவீ, வித்தை காட்டி, மேதாவீ, ஸ்ரக்^{3}வீ 'மாலையுடையவன்'

மாயாவுடன் 'இனி' 'டன்' உம் வரும். மாயீ, மாயிக.

5.2.122 ப^{3}ஹுலம் ச^{2}ந்த^{3}ஸி

வேதமொழியில் 'வினி' ஒட்டு, 'மதுப்'பின் பொருளில் பல வகையில் வரும்.

அக்^{3}னே தேஜஸ் வின்

ஸூர்ய: வர்சஸ்வான் (இங்கு வினி வரவில்லை)

வா: ச^{2}ந்தஸி வினி ப்ரகரணே அஷ்ட்ராமேக^{2}லா த்^{3}வயோப^{4}ய குஜா ஹ்ருதயானாம் தீர்த்^{3}ர்க^{4}த்வம் சேதி வக்தவ்பம்.

வேதமொழியில், அஷ்ட்ரா முதலியவைகளுக்குப்பின் 'வினி' ஒட்டு 'மதுப்'பின் பொருளில் வரும். த்^{3}வய, உப^{4}ய, அஷ்ட்ராவீ, மேக^{2}லாவீ, த்^{3}வயாவீ, உப^{4}யாவீ, ருஜாவீ, ஹ்ருதயாவீ

வா: மர்மணர்ச இதி வக்தவ்யம் மர்மாவீ

வா: ஸர்வத்ராமயஸ்யோப ஸம்க்^{2}யானம் ச^{2}ந்தஸி ப^4ாஷாயாம் ச

வேதமொழியிலும் மற்ற மொழிகளிலும் 'ஆமய' என்ற சொல்லுக்குப்பின் கட்டாயமாக 'வினி' வரும். ஆமயாவீ

வா: ஸ்ருங்க வ்ருந்த3ாப்4யாமாரகன் வக்தவ்ய:
ஸ்ருங்க, வ்ருந்த என்ற சொற்களுக்குப்பின் ஆரகன், என்றவொட்டு வரும். ஸ்ருங்காரக:, வ்ருந்தாரக:

வா: ப2வ ப1ர்ஹிப்4யாமினஜ் வக்தவ்ய:
'இனச்' ஒட்டு ப2ல, ப1ர்ஹி என்ற சொற்களுக்குப்பின் வரும்.
ப2வின:, ப1ர்ஹிண:

வா: ஹ்ருத3யாஞ்சாலுரன்ய தரஸ்யாம்
'ஹ்ருதய' என்ற சொல்லுக்குப்பின் 'ஆலு' ஒட்டு வவிருப்பாக வரும்.
ஹ்ருத3யாலு, ஹ்ருத3யீ, ஹ்ருத3யிக: ஹ்ருதயவான்

வா: ஸீதோஷ்ண த்ரு ப்ரேப்4யஸ்தன்ன ஸஹத இத்யாலுஜ் வக்தவ்ய:
'ஆலுச்' ஒட்டு, ஸீத, உஷ்ண முதலியவைகளுக்குப்பின் அதைத் தாங்க முடியாது' என்ற பொருளில் வரும்.
ஸீதாலு:, உஷ்ணாலு:, த்ருப்ராலு:

வா: தந்த ஸஹத இதி ஹிமாச்சேலு:
'ஹிம' என்ற சொல்லுக்குப்பின் 'இலு' 'அதைத் தாங்க முடியாது' என்ற பொருளில் வரும்.
ஹிமேலு:

வா: வலாது3லச்
'வல' என்ற சொல்லுக்குப்பின் 'ஊலச்' 'அதைத் தாங்க முடியாது' என்ற பொருளில் வரும்.
வலூல:

வா: வாதாத் ஸமூஹே ச வாதம் ந ஸஹத இதி ச
'வாத' என்ற சொல்லுக்குப்பின் 'அதன் கூட்டம்' அதைப் பொறுக்க முடியாது என்ற பொருட்களில் 'ஊலச்' வரும். வாதூல:

வா: பர்வ மருத்3ப்4யாம் தன் வக்தவ்ய:
'தன்' ஒட்டு பர்வ, மருத் ஆகியவைகளுக்குப்பின் வரும்.
பர்வத:, மருத:

வா: அர்த2ாத்தத3 ப4ாவே இனிர் வக்தவ்ய:
இனி ஒட்டு 'அது இல்லாதவன்' என்ற பொருளில் 'அர்த2' என்ற

சொல்லுக்குப்பின் வரும். அர்த்2 – பிச்சைக்காரன், பொருளில்லாதவன்
ஆனால் அர்த2வான் – 'பணக்காரன்'
இவைகளெல்லாம் ப3ஹுல என்பதின் மூலம் கிடைக்கப்பெற்றவை.

5.2.123 ஊர்ணாயா யுஸ்
'ஊர்ணா' என்ற சொல்லுக்குப்பின் 'யுஸ்' ஒட்டு 'மதுப்'பின் பொருளில் வரும்.
ஊர்ணாயு: 'கம்பளியுள்ள'
வேதமொழியில் என்பதையிங்கு அனுவிருத்தியாகக் கொள்கிறார்கள் சிலர்.

5.2.124 வாசோ க்3மினி:
'வாச்' என்ற சொல்லுக்குப்பின் 'மதுப்' பின் பொருளில் 'க்3மினி' ஒட்டு வரும்.
வாக்3மின் – பேச்சாளர்

5.2.125 ஆலஜாடசௌ ப3ஹுப4ாஷிணி
முதல் வேற்றுமையிலமையும் 'வாச்' என்ற சொல்லுக்குப்பின் ஆலச், ஆடச் என்ற வொட்டுக்கள் 'மிகுதியாகப் பேசுபவன்' என்ற பொருளில் வரும்.
வாசால:, வாசாட: 'வாயாடி'

வா: குத்ஸித இதி வக்தவ்யம்
இகழ்ச்சியாகக் குறிப்பிடும்போதுதான் இவ்வொட்டு வரும். மற்றபொருளில் வாக்மீ.

5.2.126 ஸ்வாமின்னைஸ்'வர்யே
விதிக்குப்புறம்பாக ஆக்கப்பட்ட சொல்லான 'ஸ்வாமின்' பிரபு வென்ற பொருளைச் சுட்டும்.
ஸ்ல ஆமினி ஸ்வாமின் 'சொத்துடையவன்' ஆனால் 'ஸ்வ வான்' (இங்கு யஜமானன் என்ற பொருளைச் சுட்டாது)

5.2.127 அர்ஸ ஆதி3ப்4யோ அச்
'அர்ஸ' முதலியவைகளுக்குப்பின் 'அச்' ஒட்டு 'மதுப்'பின் பொருளில் வரும்.
அர்ஸ'ஸ : 'மூலநோயினால் வருந்துபவன்'
உரஸ: பலம் பொருந்திய நெஞ்சுள்ளவன்'

5.2.128 த்3வந்தி3வோபதாப க3ர்ஹ்யாத் ப்ராணிந்த2ாதி3னி:
துவந்துவத் தொகை, நோயின் பெயர், நிந்தனைக்குரியவை, ஆகியவற்றிற்குப்பின் 'இனி' ஒட்டு, மறுப்பின் பொருளில், இவைகள் உயிரினங்களில் காணப்படுபவையானால், வரும்.
கடகுவலயின் – 'சங்கு, நூபுரம் நகையணிந்தவள்'
குஷ்டீ, குலாஸீ 'வெள்ளைக்குஷ்டமுள்ளவன்'
ககுத3ாவர்த்தீ, காகதாலுக்

ஆனால் புஷ்பபலவான் வ்ருக்ஷ:

வா: ப்ராண்யங்கான்னேஷ்யதே

உயிரினங்களின் உடலுறுப்புகளோடு இவ்வொட்டு வராது.

பாணிபாத வதி

5.2.129 வாதாதிஸாராப்[4]யாம் குக்ச

'வாத, ஆதிஸார' என்ற சொற்களோடு 'இனி' ஒட்டு வரும்போது, அதற்குமுன் 'குக்' ஆகமமாகும். வாதகீ, 'வாதநோயுள்ளவன்', அதிஸாரகீ 'பேதியால் வருந்துபவன்'

வா: பிஸாசாச் சேதி வக்தவ்யம்

'பிஸாச' என்ற சொல்லுக்குப்பின்னும் 'குக்' ஆகமம் வரும். பிஸாசகீ வைஸ்ரவணீ

இது ஒரு நோயைச் சுட்டும்போதுதான் வரும். ஆகையால் வாதவதீ கு[3]ஹா: இங்கு வராது.

5.2.130 வயஸி பூரணாத்

'பூரண' ஒட்டையிறுதியாகக் கொண்ட சொற்களுக்குப்பின் 'மதுப்'பின் பொருளில், வயதைக் குறிக்கும்போது 'இனி' ஒட்டு வரும்.

பஞ்சமீ – ஐந்து மாதம் அல்லது ஆண்டு ஆன

ஆனால் பஞ்சமவான் க்[3]ராமராக[3]

இங்கு வயது சுட்டப்படவில்லை.

5.2.131 ஸுகாதி[3]ப்[4]யஸ் ச

'மதுப்'பின் பொருளில் 'ஸுக' முதலியவைகளுக்குப்பின் 'இனி' ஒட்டு வரும். ஸுகீ, து: கீ[2]

5.2.132 த[4]ர்ம ஸீல வர்ணாந்தாச் ச

'தர்ம' முதலியவைகளை யிறுதியில் கொண்ட பிராதிபதிகங்களுக்குப்பின் 'இனி' ஒட்டு 'மதுப்' பின் பொருளில் வரும்.

ப்[3]ராஹ்மண த[4]ர்மீ, ப்[3]ராஹ்மணஸீலீ,

ப்[3]ராஹ்மண வர்ணீ

5.2.133 ஹஸ்தாஜ் ஜாதௌ

'ஹஸ்த' என்ற சொல்லுக்குப்பின், 'மதுப்'பின் பொருளில் 'இனி' ஒட்டு வரும். ஆக்கப்பட்ட சொல் ஒரு இனத்தைச் சுட்டும்.

ஹஸ்தீ 'யானை'

ஆனால் யஸ்தவான் புருஷ:

5.2.134 வர்ணாத்3 ப்3ரஹ்மசாரிணீ

'வர்ண' என்ற சொல்லுக்குப்பின் 'மதுப்'பின் பொருளில் 'இனி' ஒட்டு வரும். ஆக்கப்பட்ட சொல், பிரம்மசாரி என்ற பொருளைச் சுட்டும்.

வர்ணீ

ஆனால் வர்ணவான். இது 'பிம்மசாரி'யைக் குறிக்கவில்லை பிரம்மசாரி. நான்கு ஆசிரமங்களில் முதலாவது. இது முதல் மூன்று ஜாதிக்குரியது.

5.2.135 புஷ்கராதி3ப்4யோ தே3ஸே

'புஷ்கர' முதலியவைகளுக்குப்பின் 'இனி' ஒட்டு 'மதுப்'பின் பொருளில் வரும். ஆக்கப்பட்ட சொல் ஒரு இடத்தைக் குறிக்கும்.

புஷ்கரிணீ – 'குளம்'

வா: இனி ப3லாத் ப3ாஹூரு பூர்வாதுப ஸம்க்2யானம்

பாஹூ, ஊருவைத் தொடர்ந்து வரும் 'ப3ல' என்ற சொல்லுக்குப்பின் 'இனி' வரும்.

ப3ாஹூ ப3லின், ஊருப3லின்

வா: ஸர்வாதே3ஸ் ச இதி வக்தவ்யம்

'ஸர்வ' என்ற சொல் முதலில் நிற்கும் பிராதிபதிகத்துக்குப் பின்னும் 'இனி' வரும் ஸர்வத4வீ, ஸர்வகேஸீ

வா: அர்த2ாச்சாஸன்னிஹிதே

'அர்த2' என்ற சொல்லுக்குப்பின். 'இனி' 'அருகிலில்லை' என்ற பொருளில் வரும்.

அர்தி2ன் – 'செல்வத்துக்கப்பாற்பட்ட' ஆனால் அர்த2வான் 'செல்வமுடையவன்'

வா: தத3ந்தாச்சேதி வக்தவ்யம்

'அர்த2' என்ற சொல்லிறுதியில் நிற்கும் பிராதிபதிகத்துக்குப்பின்னும் இவ்வொட்டு வரும்.

ஹிரண்யார்தீ, த4ான்யார்தீ

5.2.136 ப3லாதி3ப்4யோ மதுப3ன்ய தரஸ்யாம்

'ப3ல' முதலியவைகளுக்குப்பின் 'மதுப்' விருப்பாக வரும். ஆகவே 'இனி'யும் வரும் ப3லவான், ப3லீ

5.2.137 ஸம்க்3ஞாயாம் மன்மாப்4யாம்

'மன்' அல்லது 'ம' வீற்றுச் சொற்களுக்குப்பின் 'இனி' ஒட்டு 'மதுப்'பின் பொருளில் வரும். தருவிக்கப்பட்ட சொல் ஒரு பெயராகும்.

ப்ரதி3மினீ, 'பூமி அகலமான' த3ாமினீ

ஹோமினீ 'யாகம் பண்ணுபவன்' ஸோமினீ

5.2.138 கம்ஸம்ப்^{4}யாம் ப^{3}ப^{4}யுஸ்திது தயஸ:

கம் 'தண்ணீர், மகிழ்ச்சி' ஸம் மகிழ்ச்சி என்ற 'ம' வீற்றுச் சொல்லுக்குப்பின் 'மதுப்'பின் பொருளில், ப^{3}, ப^{4} முதலிய வொட்டுக்கள் வரும்.

கம்ப^{3}: 'மேகம்' , ஸம்ப^{3}: 'மகிழ்ச்சியுள்ள', ஸம்ப^{4}: கம்யு:, ஸம்யு:, கந்தி:, ஸந்தி:, கந்து:, ந்து:, கந்த:, ஸந்த:, கம்ய, ஸம்ய:

5.2.139 துந்தி^{3}வலி வடேர் ப^{4}:

துந்தி^{3}, வலி, வடி ஆகியவற்றிற்குப்பின், ப^{4}' ஒட்டு 'மதுப்'பின் பொருளில் வரும்.

துந்தி^{3}ப^{4}:, வலிப^{4}:, வடிப^{4}:

5.2.140 அஹம்ஸுப^{4}மோர்யுஸ்

அஹம் 'நான்', ஸுப^{4}ம் என்ற சொற்களுக்குப்பின் 'யுஸ்' ஒட்டு மதுப்பின் பொருளில் வரும்.

அஹம்யு: 'ஆணவமுடையவன்'

ஸுப^{4}ம்யு: 'மங்களமான'

5.3.1 ப்ராக்^{3}தி^{3}ஸோ'ா விப^{4}க்தி:

இச்சூத்திரத்திலிருந்து திக்ஸ்ப்தே^{3}ப்^{4}ய (5.3.27) என்ற சூத்திரத்துக்கு முந்திய சூத்திரம் வரை விளக்கப்படும் ஒட்டுக்கள், விபக்தி என்ற பெயர் பெறும். சூ.5.3.1 – 26 வரை கூறப்பட்டிருக்கும் ஒட்டுக்கள் சொற்களின் பொருட்களை மாற்றாது. இவைகள் 'ஸ்வார்த' ஒட்டுக்கள் எனப்படும். இவ்வொட்டுக்கள் ஸ்வார்திகமாக ஆவதால், ஸமர்த^{2}ானாம், ப்ரத^{2}மாத் (4.1.82) ஆகியவைகள் இச்சூத்திரங்களில், அனுவிருத்தியாக வராது. ஆயினும் 'வா' என்ற சொல் (4.1.82) அனுவிருத்தியாகும்.

இவ்வொட்டுக்கள் விபத்தியென்ற ஸம்க்^{2}ஞாவினால் குறிப்பிடுவதன் நோக்கம் (1) இறுதி ஸ், ம், என்ற எழுத்துக்களை, 'இத்'தாகக் கருதப்படாததால் அவைகள் கெடா (பார்க்க 5.3.18) (2) 'இதம்' என்ற சொல்லின் சுரத்தை ஒழுங்குபடுத்துகிறது. (3) 7.2.102, அதைத் தொடர்ந்து வரும் சூத்திரங்கள், 'தயதா்தி' வகுப்பைச் சேர்ந்த சொற்களுக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் அமைதல் ஆகிய வகையாகும்.

5.3.2 கிம் ஸர்வநாம ப^{3}ஹுப^{4}யோ அத்^{3}வயாதி^{3}ப்^{4}ய:

கிம், 'ஸர்வநாம' எனப்படும் சொற்கள், பஹு ஆகியவைகளுக்குப்பின் 'ப்ராக்^{3}தி^{3}ஸ' ஒட்டுக்கள் வரும். ஆனால் 'த்^{3}வி' முதலியவைகளுக்குப்பின் (இவைகளும் ஸர்வநாமம் எனப்படும்) இவ்வொட்டு வராது. கிம், குத: 'எங்கிருந்து, குத்ர' 'எங்கே' தத:, அங்கிருந்து, தத்ர 'அங்கே' (ஸர்வநாம): பஹுத:, பஹுத்ர ஆனால் த்^{3}வாப்^{4} யாம், த்^{3}வயோ:

வா: ப^{3}ஹுக்^{3}ரஹணே ஸங்க்^{2}யாக்ரஹணம்
இங்கு ப^{3}ஹு எண்ணைச் சுட்டும் (ஸங்க்^{2}யா) ஆகையால் ப^{3}ஹோ: ஸுபாத் 'மிகுதியான சாறு' என்பதில், ஸ்வார்தி^{2}க ஒட்டு வராது.

5.3.3 இத^{3}ம இஸ்
'ப்ராக்^{3}தி^{3}ஸ' ஒட்டுக்கள் தொடரும்போது 'இத^{3}ம்' என்ற சொல்லுக்கு 'இஸ்' ஆதேசமாகும். 'இஸ்'ஸின் ஈறாக 'ஸ்' ஒரு 'இத்'தாகும். ஆகவே இதம் + ஹ (5.3.11) இஹ 'இங்கு'

5.3.4 ஏதேதௌ ரதே^{2}ா:
ர, த^{2} என்ற எழுத்துக்களை முதலாகக் கொண்ட 'ப்ராக்திஸீய' ஒட்டுக்கள் தொடரும்போது, முறையே ஏத, இத என்பவைகள் 'இதம்' என்ற சொல்லுக்கு ஆதேசங்களாகும்.
இதம் + ர்ஹில் = ஏதர்ஹி (5.3.16)
இதம் + த^{2}மு = இத்த^{2}ம் (5.3.24)

5.3.5 ஏததே^{3}ா அஸ்^{1}
ப்ராக்திஸீய வொட்டுக்கள் தொடரும்போது, ஏதத்^{3} என்ற சொல்லுக்கு 'அஸ்' ஆதேசமாகும். ஏதத்^{3} + தஸில் = அத: (5.3.7), அத்ர (5.3.10) ஸகாரம் முழுச் சொல்லுக்கும் ஆதேசமாகும் என்று சுட்டும்.

5.3.6 ஸர்வஸ்ய ஸோ அன்யதரஸ்யாம் தி^{3}
'த^{3}' காரத்தை முதலில் கொண்ட ப்ராக்தி'ஸீய வொட்டுக்கள் தொடரும்போது 'ஸர்வ' என்ற சொல்லுக்கு 'ஸ' விருப்பாக ஆதேசமாகும்.
ஸர்வத^{3}ா அல்லது ஸத^{3}ா
ஆனால் ஸர்வம் த^{3}த^{3}ாத்தி ஸர்வத^{3}ா ப்^{3}ராஹ்மணீ முழுவதையும் கொடுக்கும் பிராம்மணி. இங்கு 'த^{3}' ப்ராக்திஸீய ஒட்டு அல்ல, ஆகையால் ஆதேசம் கிடையாது.

5.3.7 பஞ்சம்யா: தஸில்
கிம், ஸர்வநாமன் எனப்படும் சொற்கள், ப^{3}ஹு ஆகியவைகள் 5ஆம் வேற்றுமையைச் சுட்டும்போது, 'தஸில்' ஒட்டு அவைகளோடு இணைக்கப்படும்.
கிம் + தஸில் = கு + தஸ் (7.2.104) குத:, யத:, ப^{3}ஹுத:

5.3.8 தஸே ஸ்^{1} ச
'தஸ்', (5.4.44.45) உக்குப் பதிலியாக 'தஸில்' (கிம், ஸர்வநாம, ப^{3}ஹுவுக்குப்பின்) வரும்.
குத:, யத: சுரத்துக்காகவும், விப^{4}க்தியென்ற ஸம்க்ஞா கொடுப்பதற்காகவும் இந்த ஆதேசம்.

5.3.9 பர்யபி^{4}ப்^{4}யாம் ச

பரி, அபி^{4} ஆகியவைகளுக்குப்பின்னும் மேலே கூறிய சூழலில் 'தஸில்' ஒட்டு வரும்.

பரித: – 'சுற்றிலும்', அபி^{4}த: 'இருபக்கத்திலும்'

5.3.10 ஸப்தம்யாஸ் த்ரல்

7ஆம் வேற்றுமையை சுட்டும்போதும் (கிம், ஸர்வநாம, ப^{3}ஹு ஆகியவைகளுக்குப்பின்) 'த்ரல்' ஒட்டு வரும். குத்ர, 'எங்கே? யத்ர 'எங்கே' தத்ர, 'இங்கு' ப^{3}ஹுத்ர – 'பல இடங்களில்'

5.3.11 இதமோ ஹ:

'இதம்' உக்குப்பின் மேலே குறிப்பிட்ட சூழலில் 'ஹ' வரும்.

இங்கு 'த்ரல்' வராது. ஆகவே, இஹ 'இங்கு' என்ற சொல் கிடைக்கும்.

5.3.12 கிமோ அத்

மேலே கூறப்பட்ட சூழலில் 'கிம்' முக்குப்பின் அத் (அ) வரும். இங்கும் 'த்ரல்' வருவதற்குத்தடை. கிம் + அத் = க்வ + அ (7.2.105) க்வ 'எங்கே' க்வ அத்^{4}யேஷ்யஸே 'எங்கு படிக்கிறாய்' தொடர்ந்து வரும் சூத்திரத்தில் காணப்படும் 'வா' வின் மூலம், இங்கு த்ரல்' உம் விருப்பாக வரும்.

5.3.13 வா ஹ சச்ச^{2}ந்த^{3}ஸி

வேதமொழியில் மேலே குறிப்பிட்ட சூழலில், 'ஹ'வும் விருப்பாக வரும். மற்றவொட்டுக்களும் வரும். குஹ (7.2.104), க்வ, குத்ர குஹஸ்த^2:. குஹஜக்^{3}மது: குஹ ஸ்'யேனேவ பேதது^{2} (ருக்வேதம் 8.62.4) (நீங்களிருவரும்) எங்கிருக்கிறீர்கள்? எங்கு போகிறீர்கள்? கழுகைப்

போன்று எங்கு விழுகிறீர்கள்:

5.3.14 இதராப்^{4}போ அபி த்^{3}ரு'ஸ்யந்தே

ஏழு, ஐந்தாம் வேற்றுமையைச் சுட்டும்போது மட்டுமல்லாமல், ஏனைய வேற்றுமைச் சொற்களோடும், இவ்வொட்டுக்கள் காணப்படுகின்றன. ப^{4}வான், 'தாங்கள் (மதிப்புக்குரிய)', தீ^{3}ர்க^3ாயு: 'நீண்டாயுளைக் கொண்டவன்', ஆயுஷ்மான், 'நீண்டாயுள் கொண்டவன், தேவானாம்ப்ரிய 'கடவுளின் அன்புக்குரியவன்' ஆகிய சொற்களோடும் இவைகள் வரும்.

முதல் வேற்றுமை

1. ஸப^{4}வான் = ததோ ப^{4}வான், தத்ர ப^{4}வான்
2. தம் ப^{4}வந்தம் = தத்ர ப^{4}வந்தம், ததோ ப^{4}வந்தம்
3. தேனப^{4}வதா = தத்ர ப^{4}வதா, ததோ ப^{4}வதா
4. தஸ்மை ப^{4}வதே = தத்ர ப^{4}வதே, ததோ ப^{4}வதா
5. தஸ்மாத்^{3} ப^{4}வத: = ததோ ப^{4}வத:, தத்ர ப^{4}வத:
6. தஸ்ய ப^{4}வத: = ததோ ப^{4}வத:, தத்ர ப^{4}வத:

7. தஸ்மின் ப^{4}வதி = ததோ ப^{4}வதி, தத்ர ப^{4}வதி.
இவ்வாறே, த்^{3}ர்க^{4}ாயு:, ஆயுஷ்மான் ஆகியவைகளோடும் அமையும்.

5.3.15 ஸர்வ ஏகான்யகிம்யத்தத^{3} காலே தா
ஸர்வ 'எல்லாம்', ஏக 'ஒன்று', அன்ய 'மற்றது', கிம் 'என்ன, யத் 'எது', தத் 'அது' ஆகியவைகளுக்குப்பின், காலத்தைக் குறிக்க, 'த^{3}ா' ஒட்டு வரும். இச்சொற்கள் ஏழாம் வேற்றுமையில் அமையும். ஸர்வத^{3}ா, ஸத^{3}ா (5.3.6) 'எப்போதும்' ஏகத^{3}ா 'ஒரு காலத்தில்', அன்யத^{3}ா 'மற்ற நேரத்தில்' கத^{3}ா (7.2.103) 'எப்போது?', யத^{3}ா 'எப்போது' தத^{3}ா அப்போது' ஆனால் ஸர்வத்ர தே^{3}ஸே', இத்தொடரிலும், ஏழாம் வேற்றுமையைச் சுட்டும் 'த்ர' காணப்பட்டாலும், இது காலத்தைக் குறிப்பிடாததால், இவ்வொட்டு வராது. இதன் பொருள் 'எல்லா இடங்களிலும்'

5.3.16 இத^{3}மோ ர்ஹில்
காலத்தைக் குறிக்கும்போது 'இத^{3}ம்' என்ற சொல்லுக்குப்பின், (7ஆம் வேற்றுமை) ர்ஹில் (ர்ஹி) ஒட்டு வரும்.
ஏதர்ஹி. 'இந்த நேரத்தில்' ஆனால் இஹ 'இவ்விடத்தில்'

5.3.17 அது^{4}னா
மேலே குறிப்பிட்ட பொருளைக் கொடுக்கும் அது^{4}னா என்ற சொல் நிபாதனமாகும்.
அது^{4}னா – இந்நேரத்தில்/காலத்தில் 'இப்போது'

5.3.18 த^{3}ானீம் ச
'த^{3}ானீம்' என்ற ஒட்டும் மேலே கூறிய பொருளைச் சுட்ட, 'இதம்' என்ற சொல்லுக்குப்பின் வரும்.
இதானீம் – 'இப்போது, இந்நேரத்தில்'

5.3.19 ததே^{3}ாத^{3}ா ச
7ஆம் வேற்றுமையிலமையும் 'தத்^{3}' என்ற சொல்லுக்குப்பின், காலத்தைக் குறிக்க 'த^{3}ா' வரும். 'த^{3}ானீம்' உம் வரும்.
தத^{3}ா அல்லது தத^{3}ானீம் 'அப்போது' 'அக்காலத்தில்'

5.3.20 தயோர் த^{3}ார்ஹிலௌ ச ச^{2}ந்த^{3}ஸி
இவ்விரண்டு சொற்களுக்குப்பின்னும், (இத^{3}ம், தத்^{3}) முறையே த^{3}ா, ர்ஹில் என்ற வொட்டுக்கள் வேத மொழியில் வரும். மற்ற ஒட்டுக்களும் வரும்.
இத^{3}ா, (5.3.3), தர்ஹி (7.2.102) இத^{3}ானீம், தத^{3}ானீம்

5.3.21 அனத்^{3}வதனே ர்ஹில் அன்யதரஸ்யாம்
(கிம், ஸர்வநாமன், ப^{3}ஹு ஆகியவற்றிற்குப் பின்) இன்றைக்கல்லாத மற்ற

காலத்தைச் சுட்ட, ர்ஹில் ஒட்டு, விருப்பாக வரும்.
கர்ஹி, கத^3ா (7.2.103), யர்ஹி, யத^3ா தர்ஹி, தத^3ா.

5.3.22 ஸத்^{3}ய: பருத் பரார்யைஷம: – பரேத்^{3}யவ்யத்^{3}ய பர்வேத்^{3} யுரன்யேத்^{3}யு: அன்யதரேத்^{3}யுரிதரேத்^{3}யுரபரேத்^{3}யுரத^4 – ரேத்யுருப^{4}யேத்^{3}யுருத்தரேத்^{3}யு:
ஸத்^{3}ய, பருத் முதலியவைகள் நிபாதனங்கள்.
ஸமானே அஹனி – ஸத்^{3}ய; : (ஸமான் → ஸ த்யஸ்) 'அதே நாள்'
பூர்வதரே ஸம்வத்ஸரே : பருத் (பூர்வ : பர + உத்) 'கடந்த ஆண் டு'
பூர்வதரே ஸம்வத்ஸரே : பராரி (பூர்வதர → பர + ஆரி) 'கடந்த ஆண்டுக்கு முந்தின ஆண்டு'
அஸ்மின் ஸம்வத்ஸரே : ஐஷம: (இதம் → இஸ + ஸமதண் (ஆண்டு) 'நடக்கும் ஆண்டில்'
பரஸ்மின்னஹனி : பரேத்^{3}யவி (பர + ஏத்^{3}யவி (நாள்) 'நாளைக்கு'
அஸ்மின்னஹனி : அத்^{3}ய (இத^{3}ம்) + த்^{3}யஸ் (ஒரு நாள்) 'இன்று'
பூர்வன்மின்னஹனி : பூர்வேத்^{3}யுஸ் (பூர்வ + ஏத்^{3}யு:) 'நேற்று முன் தினம்'
அன்யஸ்மின்னஹனி : அன்யேத்^{3}யுஸ் (அன்ய + ஏத்^{3}யுஸ்) 'நாளை மறு நாள்'
அன்யதரஸ்மின்னஹனி : அன்யதரேத்^{3}யு : (அன்யதர + ஏத்^{3}யு) 'இரண்டு நாட்களில் ஒரு நாள்'
இதரஸ்மின்னஹனி : இதரேத்^{3}யு: (இதர + ஏத்^{3}யு:) 'வேறு ஒரு நாள்'
அபரஸ்மின்னஹனி : அபரேத்யு: (அபர + ஏத்^{3}யு:) 'அடுத்த நாள்'
அத^{4}ரஸ்மின்னஹனி : அத^{4}ரேத்^{3}யு: (அத^{4}ர + ஏத்^{3}யு:) 'நேற்று முந்தைய நாள்'
உப^{4}யோரஹ்னோ: : உபயேத்யு: (உப^{4}ய + ஏத்^{3}யு:) 'இரண்டு நாட்களிலும்'
உத்தரஸ்மின்னஹனி (:உத்தர + ஏத்^{3}யு:)
உத்தரேத்^{3}யு: (: உத்தர + ஏத்^{3}யு:) 'தொடர்ந்து வரும் நாட்களில் ஒரு நாள்'

5.3.23 ப்ரகாரவசனே த^2ால்
'கிம்' முதலியவைகளுக்குப்பின் (5.3.2) 'வகை' என்ற பொருளைச் சுடும்போது த^2ா (த^2ால்) ஒட்டு இணைக்கப்படும். தத^2ா 'அவ்வித மாக', 'அவ்வகையாக' யத^2ா. ஸர்வத^2ா 'எவ்வகையிலும்'.

5.3.24 இத^{3}மஸ் த^{2}மு:
மேற்கூறிய பொருளில் 'த^{2}ம்' என்ற ஒட்டு 'இத^{3}ம்' என்ற சொல்லுக்குப்பின் வரும்.
இத்த^{2}ம் 'இந்த விதமாக'

5.3.25 கிமஸ் ச
'கிம்' என்ற சொல்லுக்குப்பின்னும் 'த^{3}மு' ஒட்டு மேற்கூறிய பொருளில் வரும்.
கத^{2}ம் – 'எப்படி, எவ்வகையில்?'

5.3.26 த^{2}ா ஹேதௌ ச ச^{2}ந்த^{3}ஸி

'த^{2}ா' ஒட்டு, 'காரணம்' என்ற பொருளைக் குறிக்க, வேதமொழியில் 'கிம்' என்ற சொல்லுக்குப்பின் வரும். மேலே கூறிய பொருளில் இவ்வொட்டு, 'கிம்' என்ற சொல்லுக்குப்பின் வரும்.

கத^{2}ா – ஏன்?, எதனால்?

கத^{2}ா – 'எப்படி, எவ்வகையில்'

கத^{2}ா ந ப்ருச்'ச^{2}ஸி 'ஏன் கேட்கவில்லை'

கத^{2}ா தே^{3}வா ஆஸன் 'எவ்வுருவத்தில் அல்லது எவ்வாறு கடவுளிருந்தார்கள்'

5.3.27 தி^{3}க்ச^{2}ப்தே^{3}ப்^{4}ய: ஸப்தமி பஞ்சமீ ப்ரத^{2}மாப்^{4}ய தி^{3}க்^{3}தே^{3}ஸ'காலேஷ்வஸ்தாதி: 7,5,1 ஆம் வேற்றுமையில் முடியும் திசையைக் குறிக்குஞ் சொற்களுக்குப்பின், அவைகள் 'திசை, இடம், காலம்' ஆகியவைகளைக் குறிக்கும்போது 'அஸ்தாத்' என்ற ஒட்டு. அவைகளின் பொருட்களை மாற்றாமல், வரும். புரஸ்தாத்^{3} வஸதி 'அவன் கீழ்த்திசையில் வசிக்கிறான்'

புரஸ்தாத^{3}ாக^{3}த:– 'அவன் கிழக்கிலிருந்து வந்தான்'

புரஸ்தாத்^{3}ரமணீயம் 'முன்பு இது அழகாக இருந்தது'

மாற்று எடுத்துக்காட்டுகள்

ஐந்த்^{3}ர்யாம் தி^{3}ஸி' வஸதி (திசையைக் குறிக்கும் சொல் இங்கு இல்லை)

பூர்வம் க்^{3}ராமம் க^{3}த: (7,5,1, வேற்றுமைச் சொல் இல்லை) 'முன்பு கிராமத்துக்குச் சென்றான்' பூர்வஸ்மின் கு^{3}ரௌ வஸதி.

5.3.28 த^{3}க்ஷிணோத்தராப்^{4}யாம் அதஸுச்

(7, 5, 1)ஆம் வேற்றுமையிலமையும் திசை, இடம், காலம் இவைகளைக் குறிக்கும்) தக்ஷிண, உத்தர என்ற சொற்களுக்குப்பின் 'அதஸுச்' என்ற ஒட்டு வரும்.

த^{3}க்ஷிணதோ வஸதி

த^{3}க்ஷிணத ஆக^{3}த:

த^{3}க்ஷிணதோ ரமணீயம்

உத்தரதோ வஸதி

உத்தரத ஆக^{2}த:

உத்தரதோ ரமணியம்

5.3.29 விப^{4}ாஷா பராவராப்^{4}யாம்

பர, அவர என்ற சொற்களுக்குப் பின் 'அதஸுச்' ஒட்டு, மேற்கூறிய சூழலில், அதே பொருளில், விருப்பாக இணைக்கப்படும்.

பரத: அல்லது பரஸ்தாத் 'வஸதி (அ) ஆக^{3}த:, (அ) ரமணீம்

அவர: அல்லது அவரதோ

5.3.30 அஞ்சேர் லுக்

திசையைக் குறிக்கும் 'அஞ்ச்'ஐ யிறுதியாகக் கொண்ட சொற்களுக்குப்பின் நிற்கும் 'அஸ்தாதி' ஒட்டு கெடும். ப்ராக், ப்ராக்3 வஸதி (=ப்ராச்யாம் தி3ஸி' வஸதி) ப்ராக3ாக3த, ப்ராக் ரமணீயம் 'ப்ராசீ'யின் பெண்பால் ஒட்டும் 'தத்தித' ஒட்டு கெடும் போது கெடும். (1.2.49)

5.3.31 உபரி உபரிஷ்ட2ாத்

உபரி, உபரிஷ்ட2ாத் என்ற சொற்கள். 'அஸ்தாதி' ஒட்டின் பொருளில். நிபாதனங்களாகும்.
ஊர்த்4வ + ரில்/ரிஸ்தாதில் = உபரி (அ) உபரிஸ்தாத் உபரி வஸதி 'மேலே வசிக்கிறான்'
உபர்யாக3த: – மேலேயிருந்து வந்திருக்கிறான் உபரி ரமணீயம்
உபரிஷ்ட2ாத்3 வஸதி, உபரிஷ்ட2ாத3ாக3த:,
உபரிஷ்ட2ாத்3 ரமணீயம்

5.3.32 பஸ்'சாத்

'பஸ்'சாத்' என்ற சொல், (அஸ்தாதி என்ற பொருளில்) நிபாதனமாகும்.
அபர → பஸ்'ச + ஆதி = பஸ்சாதி
பஸ்ச'சாத்3 வஸதி (அபரஸ்யாம் தி3ஸி' வஸதி)
பஸ்'சாத3ாக3த:– பின்னால் வந்தான்
பஸ்'சாத்3 ரமணீயம்

வா: தி3க் பூர்வபத3 ஸ்யாபரஸ்ய பஸ்'சப4ாவோ வக்தவ்ய:
திசையைக் குறிக்குஞ் சொல்லுக்குப்பின் நிற்கும் 'அபர' என்ற சொல்லும் 'பஸ்'ச' என்று மாறும். அதன் பின் 'ஆதி' இணைக்கப்படும்.
உத்தரபஸ்'சாத்
த3க்ஷிணபஸ்'சாத்

வா: அர்தே4ாத்தரபத3ஸ்ய தி3க் பூர்வபத3ஸ்ய பஸ்'ச ப4ாவோ வக்தவ்ய
மேற்கூறிய தொகைக்குப்பின் 'அர்த4' என்ற சொல் தொடர்ந்து வரும்போதும் 'அபர' என்ற சொல், பஸ்'ச' என்று மாற்றமடையும்.
த3க்ஷிண பஸ்'சார்த4:
உத்தர பஸ்'சார்த4:

வா: வினாபி பூர்வ பதே3ன பஸ்'ச பாவோ வக்தவ்ய: 'அபர' என்ற சொல்லுக்கு முன் மற்றொரு சொல் நிற்காமலிருந்தாலும், பஸ்'ச என்று மாறும்.
பஸ்'சார்த4:

5.3.33 பஸ்'ச பஸ்'சா ச ச2ந்த3ஸி

வேதமொழியில் (காணப்படும்) பஸ்'ச, பஸ்'சா. என்ற சொற்கள்

('அஸ்தாதி'யின் பொருளில்) நிபாதனங்களாகும்.
புரா வ்யாக்^{4}ரே ஜாயதே, பஸ்'ச, (அல்லது) பஸ்'சா, (அ) பஸ்'சாத்^{3} ஸிம்ஹ:
'புலி முன்னால் போகிறது. (அதன்) பின்னால் சிங்கம் (செல்கிறது)

5.3.35 ஏனப்^{3} அன்யதரஸ்யாம் அதூ^{3}ரே அபஞ்சம்யா:
வெகு தூரத்தைச் சுட்டாத எல்லையைக் குறிக்குஞ் சொல்லாகவும், 5ஆம் வேற்றுமையின் பதிலிபல்லாததாகவும் ஆன, ('அஸ்தாதி'யின் பொருளைச் சுட்டும் உத்தர, அத^{4}ர, த^{3}க்ஷிண) என்ற சொற்களுக்குப்பின், ஏனப் (ஏன) ஒட்டு விருப்பாக வரும்.
உத்தரேண (அ) உத்தராத் (அ) உத்தரதோ வஸதி, (அ) ரமணீயம் த^{3}க்ஷிணேன, த^{3}க்ஷிணாத், த^{3}க்ஷிணதோ, அத^{4}ரேண, அத^{4}ஸ்தாத், அத^{4}ராத் ஆனால், 'வெகுதூரம்' என்ற பொருளைச் சுட்டும்போது உத்தராதி^{3} வஸதி 'அவன் வடக்கே வெகுதூரத்தில் வசிக்கிறான்' உத்தராத்^{3}ஆத^{3}க^{3}த: 'அவன் வடக்கேயிருந்து வந்திருக்கிறான்' (5ஆம் வேற்றுமைப் பொருளில்) 5.3.39 வரையில் 'அபஞ்சம்யா:' தொடரும்.

5.3.36 த^{3}க்ஷிணாத்^{3} ஆச்
'த^{3}க்ஷிண' என்ற சொல்லுக்குப்பின் ('அஸ்தாதி'யின் பொருளில்) ஆச் (ஆ) ஒட்டு வரும் (5ஆம் வேற்றுமையுருபின் பதிலியாக அல்ல)
த^{3}க்ஷிணா வஸதி (அ) ரமணீயம் (அ) ஆக^{3}த:

5.3.37 ஆஹி ச தூ^{3}ரே
'வெகு தூரம்' என்ற பொருளில், 'ஆஹி' என்ற ஒட்டும், 'த^{3}க்ஷிண' என்ற சொல்லுக்குப்பின் 'அஸ்தாதி'யின் பொருளில் வரும். அதாவது 'ஆச்' ஒட்டுடன், ஆஹி என்ற ஒட்டும் 'தக்ஷிண'வுக்குப்பின் வரும். த^{3}க்ஷிணாஹி வஸதி
த^{3}க்ஷிணா வஸதி
அவன் தெற்கே வெகுதூரத்தில் வசிக்கிறான்

5.3.38 உத்தராச் ச
'உத்தர வடக்கு' என்ற சொல்லுக்குப் பின்னும் மேற்கூறிய வொட்டுக்கள், மேற்குறிப்பிட்ட பொருளைச் சுட்டுமாறு வரும். உத்தராஹி வஸதி
உத்தரா வஸதி

5.3.39 பூர்வாத^{4}ரா வராணாமஸி புரத^{4}வ ரஸ்'சைஷாம்
பூர்வ, அத^{4}ர, அவர ஆகியவைகளோடு 'அஸ்தாதி'யின் பொருளில் 'அஸி' ஒட்டு வரும். இவ்வொட்டு இணைக்கும் போது இச்சொற்களுக்கு முறையே புர், அத்^{4}, அவ் ஆகியவைகள் ஆதேசமாகும்.
புரோ வஸதி
அதே^{4}ா வஸதி
அவோ வஸதி

5.3.40 அஸ்தாதி ச

மேற்கூறிய சொற்களுக்குப்பின் 'அஸ்தாதி' ஒட்டு வரும் போதும் மேலே குறிப்பிட்டவை அவைகளுக்குப் பதிலியாகும்.

புரஸ்தாத்[3] வஸதி

அத[4]ஸ்தாத்[3] வஸதி

5.3.41 விப[4]ாஷா அவரஸ்ய

'அவர' என்ற சொல்லைத் தொடர்ந்து 'அஸ்தாதி' ஒட்டு நிற்கும்போது 'அவ்' ஆதேசம் விருப்பாக வரும்.

அவஸ்தாத்[3] வஸதி அல்லது அவரஸ்தாத்[3] வஸதி

அவஸ்தாத[3]ாக[3]த: அல்லது அவரஸ்மதாத[3]ாக[3]த:

5.3.42 ஸங்க்[4]யாயா வித[4]ார்தே[2] த[4]ா

எண்ணுப் பெயர்களுக்குப்பின் த[4]ா ஒட்டு செயல் செய்யப்படும் விதத்தைச் சுட்டும்போது வரும்.

ஏகத[4]ாபு[4]ங்க்தே – அவன் ஒரு முறை உண்கிறான்.

த்[3]வித[4]ா க[3]ச்சதி 'இருமுறை செல்கிறான்'

5.3.43 அதி[4]கரண விசாலே ச

ஒரு பொருளைப் பங்கிடுதல் அல்லது பகிர்ந்தளித்தல் என்ற பொருளைச் சுட்டவும் எண்ணுப் பெயருக்குப்பின் 'த[4]ா' ஒட்டு வரும்.

ஒன்றைப் பலவாக்குதல் அல்லது பலவற்றை யொன்றாக்குதல் என்பது 'விசால' என்ற சொல்லின் பொருள்.

ஏகம் ராஸிம் பஞ்சத[4]ா குரு

'ஒரு குவியலை ஐந்து பங்காக்கு'

ஏகம் ராஸிம் அஷ்டத[4]ா குரு

5.3.44 ஏகாத்[3]தோ[4] த்[4]யமுஞ் அன்யதரஸ்யாம்

'ஏக' என்ற எண்ணுப் பெயருக்குப்பின் த்[4]யமுஞ் (த்[4]யம்)

'த[4]ா'வுக்குப் பதிலியாக விருப்பாக வரும்.

ஏகத[4]ா ராஸிம்குரு, அல்லது ஐகத்[4]யம் குரு

5.3.45 த்[3]வி த்ர்யோஸ்[1] ச த[4]முஞ்

த்[3]வி (இரண்டு) த்ரி (மூன்று) என்ற எண்ணுப் பெயர்களுக்குப் பின். த[4]முஞ், (த[4]ம்), த[4]வுக்கு விருப்பாக பதிலியாகும்.

த்[3]வித[4]ா, த்[3]வைத[4]ம்

த்ரித[4]ா, த்ரைத[4]ம்

வா: த[4]முஞந்தாத் ஸ்வார்தே[2] ட[3]த[3]ாஸனம்

'த[4]முஞ்'ஐ யீற்றாகக் கொண்ட சொற்களுக்குப்பின். பொருள்

மாற்றமில்லாமல், 'ட[3]' ஒட்டு (இறுதி உயிர் கெட்டு) வரும். மதி த்[3]வைத[4]ானி ஸம்ஸ்ரயந்தே

5.3.46 ஏத[4]ாச்ச

த்[3]வி, த்ரி ஆகிய எண்ணுப் பெயர்களுக்குப்பின், 'த[4]ா'வுக்குப் பதிலியாக 'ஏத[4]ா'வும் வரும். த்[3]வேத[4]ா, த்[3]வைத[4]ம், த்[3]வித[4]ா

த்ரேத[4]ா, த்ரைத[4]ம், த்ரித[4]ா

5.3.47 யாப்யே பாஸப் .

பாஸப் (பாஸ) என்ற ஒட்டு, 'இகழ்ச்சி அல்லது ஏளனம் என்ற பொருளைச் சுட்டுமாறு வரும்.

வையாகரண பாஸ[1]: – மோசமான இலக்கணக்காரன்,

யாக்ஞிக பாஸ: கெட்ட நடத்தையுள்ள இலக்கணத்தில் சிறந்த தேர்ச்சியுள்ளவன் என்பதைச் சுட்ட இவ்வொட்டு வராது.

5.3.48 பூரணாத்[3] ப[4]ாகே[3] த்யாத் அண்

முழுமையைச் சுட்டும் 'தீய' ஒட்டை யீறாகக் கொண்ட, எண்ணுப் பெயருக்குப்பின், 'அண்' ஒட்டு, 'பகுதி' என்ற பொருளில் வரும்.

இச்சூத்திரம் சுரத்தைப் பற்றியது, 'அண்' ஒட்டு இணைப்பதால், சுரத்தில் தான் மாறுபாடு காணப்படும். அதன் வடிவத்திலல்ல. த்[3]வித்ய என்ற சொல்லின் 'தீ' உதாத்த சுரம் பெறும். அச்சொல்லோடு 'அன்' ஒட்டு இணைக்கும்போது 'த்வி' உதாத்த சுரம் பெறும்.

த்[3]விதீயம், 'இரண்டாவது'

'பூரண' என்ற சொல், இச்சூத்திரத்துக்குத் தேவையற்றது, ஆயினும் இச்சொல், தொடர்ந்து வரும் சூத்திரத்துக்காக இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

5.3.49 ப்ராக் ஏகாதஸ[1]ப்[4]யோ அச்ச[2]ந்த[3]ஸி

வேத மொழியைத் தவிர்த்த மற்ற மொழிகளில், முழுமையைச் சுட்டும் ஒட்டில் முடியும், (தனது பொருளையேயுணர்த்தும்) பதினொன்று வரையிலான எண்ணுப் பெயர்களுக்குப்பின் 'அண்' ஒட்டு வரும்.

இதுவும் சுரத்தைப் பற்றியது.

சதுர்த[2]: 'ச' சுரம் பெறும் ஆனால் ஏகாத[3]ஸ[1]: 'ஸ' சுரம் பெறும் சுர வேறுபாடு இங்கு இல்லை.

5.3.50 ஷஷ்ட[2]ாஷ்டமாப்[4]யாம் ஞ ச

மேற்கூறிய சூழலில், ஷஷ்ட[2] அஷ்ட[1]ம என்ற சொற்களுக்குப்பின் 'ஞ' ஒட்டு வரும்.

ஷாஷ்ட[2]: அல்லது ஷஷ்ட[2]:

ஆஷ்டம: அல்லது அஷ்டம:

5.3.51 மான பஸ்'வங்க^{3}யோ: கன்லுகௌ ச

ஷஷ்ட^{2}, அஷ்ட'ம என்ற சொற்களுக்குப்பின் முறையே 'கன்' ஒட்டும், ஒட்டு கெடுதலும், (முறையே) தான்ய அளவு, விலங்கின் உடலின் ஒரு அவயம் என்ற பொருட்களை சுட்டும்போது வரும்.

ஷாஷ்ட^{2}: அல்லது ஷஷ்ட: 'ஒரு தானிய எடையின் ஆறில் ஒரு பங்கு'
அஷ்ட'ம:, அஷ்டம: ஒரு விலங்கின் உடலின் எட்டாவது பகுதி.

5.3.52 ஏகாத்^{3} ஆகினிச் சாஸஹாயே.

'ஏக' என்ற சொல்லுக்குப்பின் 'ஆகினிச்' (ஆகினி) என்றவொட்டு (அச் சொல் தனது பொருளைச் சுட்டும் போது) 'துணையற்ற' என்ற பொருளில் வரும். 'கன்' ஒட்டும் வரும், கெடுதலும் நிகழும் என்பதை 'ச' சுட்டும். கன், அகினிச் ஒட்டுக்கள் கெடும் ஏகாகின் (ஏகாகீ முதல் வேற்றுமை ஒருமை), ஏகக:,ஏக: 'தனியாக'

5.3.53 பூ^{4}தபூர்வே சரட்

ஒரு பெயர்ச் சொல்லுக்குப்பின் சரட் (சர) (பெண்பால் ஒட்டு ஙீப்) 'இது முன்பேயிருந்தது' என்ற பொருளில் வரும்.

ஆட்^{3}யசர:– 'ஒரு காலத்தில் செல்வந்தனாக விருந்தான்'
ஆட்^{3}யசர் (பெண்பால்)

5.3.54 ஷஷ்ட்யா ரூப்ய ச

ஆறாம் வேற்றுமைப் பெயர்ச் சொல்லுக்குப்பின் 'ரூப்ய' என்ற வொட்டும் ('சரட்'டும்) 'ஒரு காலத்தில் அல்லது முன்பு ஒருவனுக்குச் சொந்தமாக இருந்தது' என்ற பொருளில் வரும்.

தே^{3}வத^{3}த்தரூப்ய : (அத^{3}வதத்த பூ^{4}த பூர்வோ கௌ:) 'முன்பு தேவதத்தனுக்குச் சொந்தமாக விருந்த பசு' தே^{3}வத^{3}த்த சர:

5.3.55 அதிஸ'ாயனே தமபி^{4}ஷ்ட^{2}னௌ

'மிகச்சிறந்த' 'ஈடு இணையற்ற' என்ற பொருளில், தமப் (தம்) இஷ்டன் (இஷ்ட) என்றவொட்டுக்கள் பெயர்ச் சொல்லுக்குப்பின் வரும்.

ஆட்^{3}யதம: 'இவர்கள் எல்லோரும் பணக்காரர்கள். இவன், இவர்கள் எல்லோரையும் காட்டிலும் பெரிய பணக்காரன்', த^{3}ர்ஸனீய தம: படிஷ்ட: இவர்கள் எல்லோரும் கெட்டிக்காரர்கள். இவர்களுள். இவன் மிகச் சிறந்த கெட்டிக்காரன்.

லகி^{4}ஷ்ட^{2};

5.3.56 திஙஸ்' ச

வினைச் சொல்லுக்குப் பின்னும் 'தமப்' ஒட்டு சிறப்பைக் குறிக்கும் போது வரும்.பசதி தமாம். 'இவன் எல்லோரையும்விடச் சிறப்பா கச் சமைக்கிறான்' ஜல்பதிதமாம் 'சிறப்பாகப் பேசுகிறான்'

5.3.57 த்விவசன விப[4]ஜ்ய உபபதே தரப் ,யஸுனௌ

இரு பொருட்களை ஒப்பிடும் பொருளையோ அல்லது உபபதமாக வருஞ் சொல் அதனோடு நிற்கும் சொல்லிலிருந்து வேறுபட்டது என்ற பொருளைச் சுட்டும்போதும், தமப் (தம), ஈயஸுன் (ஈயஸ) என்றவொட்டுக்கள், ஒரு பெயர்ச் சொல் அல்லது வினைச் சொல்லுக்குப்பின் வரும்.

ஆட்[3]யதர:– இவனைவிட அவன் பணக்காரன்

பசதிதராம்:– இவனைவிட அவன் சிறப்பாகச் சமைக்கிறான்

படீயான் :– இவனைவிட அவன் கெட்டிக்காரன்

மாது[2]ரா: பாட[1]லீபுத்ரகேப் [4]ய: ஆட்[3]யதர: பாடலீபுரத்திரத்தில் வசிக்கும் மக்களைவிட மதுரையில் வசிக்கும் மக்கள் பணக்காரர்கள்' மாது[2]ரா: பாட[1]லீபுத்ரகேப்[4]ய: படீயாம்ஸ:

5.3.58 அஜாதி[3] கு[3]ணவசனாத்[3] ஏவ

உயிரெழுத்தை முதலாகக் கொண்ட ஒட்டுக்கள் (அதாவது ஈயஸ், இஷ்ட[2]) அடையைக் குறிக்குஞ் சொற்களுக்குப்பின் மட்டும்தான் இணைக்கப்படும்.

லக்[4]யான், வகி[4]த்ரு

ஆனால் பாசகதர[3]:, பாசகதம:

இச்சூத்திரத்தில் காணப்படும் 'ஏவ' என்ற சொல், ஒட்டின் அடிச் சொல்லுக்கு அல்ல. ஆகவே படு[1]தர:, படு[1]தம: என்ற சொற்களும் சரியானவைகளே.

5.3.59 துஸ்[1] ச[2]ந்தஸி

'த்ரு[1]' ஈற்றுப் பெயர்ச் சொற்களுக்குப்பின், வேதமொழியில், இவ்வொட்டுக்கள் (இஷ்ட[2]ன், ஈயஸ்) வரும். இச்சூத்திரம், அடைகளைத்தவிர, மற்ற சொற்களோடும் வரலாமென்று உணர்த்துகிறது.

த்ரு[1] = த்ரு[1]ன், த்ருச்

கரிஷ்ட[2]: (கர்த்ரு + இஷ்ட[2]ன் = கர்(6.4.154) இஷ்டன்) வெகு சிறப்பாகச் செய்பவன்

5.3.60 ப்ரஸ[1]ஸ்யஸ்ய ஸ்[1]ர:

இவ்வொட்டுக்கள் தொடரும்போது 'ஸ்[1]ர' 'ப்ரஸ[1]ஸ்ய'வுக்குப் பதிலியாகும்.

ஸ்[1]ரேஷ்ட[2]: – எல்லோரிலும் சிறந்தவன்

ஸ்[1]ரேயான் – இருவரில் சிறந்தவன்

5.3.61 ஜ்ய ச

இவ்வொட்டுக்களுக்குமுன், 'ப்ரஸ[1]ஸ்ய'வுக்குப் பதிலியாக 'ஜ்ய' வரும்.

ஜ்யேஷ்ட[2]: – எல்லோரையும்விட புகழ் வாய்ந்தவன்

ஜ்யாயான் – இவனைவிட அவன் புகழ்வாய்ந்தவன்

'ஈயஸ்' இய 'ஈ'க்குப் பதிலியாக 'ஆ' வரும் (6.4.160)

5.3.62 வ்ருத்3த4ஸ்ய ச

'வ்ருத்3த4' என்ற சொல்லுக்குப் பதிலியாகவும் 'ஜ்ய' (இவ்வொட்டுக்கள் தொடரும்போது) வரும்.

ஜ்யேஷ்ட2: எல்லோரையும்விட மூத்தவன்

ஜ்யாயான் – இருவரில் மூத்தவன்

5.3.63 அந்திக ப3ாட3யோர் நேத3ஸாதெ4ள

அந்திக, ப3ாட3 என்ற சொற்களுக்கு முறையே, நேத, ஸாத4 என்பவைகள், இவ்வொட்டுக்கள் தொடரும்போது பதிலியாகும்.

நேதி3ஷ்டம்,

நேதீ3ய:

ஸாதி4ஷ்டம்

ஸாதீ4ய:

5.3.64 யுவால்பயோ: கன் அன்யதரஸ்யாம்

'யுவன்', அல்ப என்ற சொற்களைத் தொடர்ந்து இவ்வொட்டுக்கள் வரும்போது 'கன்' அச்சொற்களுக்கு விருப்பாக பதிலியாகும்.

கனிஷ்ட2: அல்லது யவிஷ்ட2: 'இவர்கள் எல்லோரையும் விட இவன் இளையவன்'

கனீயான் அல்லது யவீயான் 'இவ்விருவர்களில் இவன் சிறியவன்' அல்பிஷ்ட2: அல்லது கனிஷ்ட2:

அல்பீயான் அல்லது கனீயான்

5.3.65 வின் மதோர்லுக்

இஷ்ட2ன், ஈயஸுன் ஒட்டுக்கள் தொடரும்போது, வின், மதுப் ஒட்டுக்கள் கெடும்.

ஸ்1ரக்3வின் – ஸ்ரஜிஷ்ட: அல்லது ஸ்ரஜீயான்

த்வக்3வத் – த்வசிஷ்ட: அல்லது த்வசீயான் வின், மத் ஒட்டுக்களில் மு டியுஞ் சொற்களில் (Comparitive) (Superlative) ஈயஸ். இஷ்ட2ன் ஒட்டுக்களிணைத்து ஆக்கப்படுமென்பதைச் சுட்டும் (ஞாபகம்) இச்சூத்திரம்.

5.3.66 ப்ரஸம்ஸாயாம் ரூபப்

ரூபப் (ரூப) ஒட்டு, பெயர்ச்சொல், (அ) வினைச் சொற்களுக்குப்பின் 'புகழ்ச்சி' என்ற பொருளைச் சுட்டும் போது வரும்.

வையாகரணரூப – புகழ் வாய்ந்த இலக்கணக்காரர்

பசதி ரூபம் (ஒரு), சிறந்த சமையற்காரன்

பசரோரூபம் (இரு) சிறந்த சமையற்காரர்கள்

பசந்திரூபம் (பன்) சிறந்த சமையற்காரர்கள்

5.3.67 ஈஷத்^{3} அஸமாப்தெள கல்பப்^{3} தே^{3}ஸ்^{1}ய தே^{3}ஸீ^{1}யர:

கல்பப் (கல்ப), தே^{3}ஸ்ய, தே^{3}ஸீய (தே^{3}ஸீய) என்ற வொட்டுக்கள், பெயர்ச்சொல், வினைச் சொற்களுக்குப்பின் 'சிறிது குறைந்த' என்ற பொருளில் வரும். படு^{1}கல்ப:, படு^{1} தே^{3}ஸ்ய:, படுதே^{3}ஸ்^{1}ய: 'சிறிது குறைந்த கெட்டிக்காரன். அதாவது முழுவதும் கெட்டிக்காரனல்ல 'சுமாரான கெட்டிக்காரன்.

பசதிகல்பம், பசதி தே^{3}ஸ்யம்,

பசதி தே^{3}ஸ்^{1}யம் (வினைச் சொல்)

5.3.68 விபா^{4}ஷா ஸு போ ப^{3}ஹுச் புரஸ்தாத் து

வேற்றுமையுருபுடன் சேர்ந்து நிற்கும் பெயர்ச் சொல்லோடு ப^{3}ஹுச் (ப^{3}ஹு) ஒட்டு விருப்பாக மேலே குறிப்பிட்ட பொருளில் வரும். இவ்வொட்டு மற்ற வொட்டுக்களைப் போல சொற்களுக்குப்பின் வராமல், அவைகளுக்கு முன்னால் நிற்கும்.

'ப^{3}ஹுச்' சின் 'ச்', இறுதியசை உதாத்தசுரம் பெறும் என்று சுட்டும்.

ப^{3}ஹுபடு: 'சுமாரான கெட்டிக்காரன்'

பஹுரு^{3}டீ^{3} த்^{3}ராக்ஷா – சுமாரான இனிப்புள்ள திராட்சை

5.3.69 ப்ரகார வசனே ஜாதீயர்

தனிச்சிறப்பைக் குறிக்கும் வேற்றுமைச் சொல்லுக்குப்பின் 'ஜாதீய' வொட்டு வரும்.

படு^{3}ஜாதீய 'அவன் கெட்டிக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவன்'

5.3.70 ப்ராகி^{3}வாத் க:

'க' ஒட்டு, இலே ப்ரதிக்ருதெள (5.3.96) என்ற சூத்திரம் வரையில் தொடர்ந்து பயன்படுத்தப்படும், அஸ்^{1}வக: 'யாருடைய குதிரை? பார்க்க 5.3.73

5.3.71 அவ்யய ஸர்வநாம்னாம கச் ப்ராக் டே:

அகச் (அக்) ஒட்டு, அவ்யயம், மாற்றுப் பெயர் (ஸார்வநாமன்) ஆகிய சொற்களோடு, அவைகளின் ஈற்றயல் உயிருக்கு முன் இணைக்கப்படும். இவைகள் 'ப்ராகிவீய' வொட்டுக்களின் பொருளைச் சுட்டும் 'ச்' (அகச்சின்) ஈற்றசை உதாத்த சுரம்பெறும் என்று சுட்டுகிறது.

இவ்வொட்டு வினைச் சொல்லுடனும் வரும்.

உச்சை: + அக = உ^{1}சச் + அக் + ஐ = உ^{1}ச்சகை:

நீசகை:

ஸர்வகே, <ஸர்வே

விஸ்^{1}வகே (<விஸ்^{1}வே)

இவ்வொட்டுக்கள், ப்ராதிபதிகம், வேற்றுமைச் சொல் இரண்டுடனும் வரும். ஸர்வகே. முதலியவைகளில் வேற்றுமைச் சொல்லுடன் இவ்வொட்டு இணைக்கப்பட்டிருக்கிறது.

யுஷ்மகாபி:, அஸ்மகாபி:, யுவகயோ: ஆகியவற்றில், பிராதிபதிகங்களோடு இவ்வொட்டிணைக்கப்பட்டிருக்கிறது. அதாவது யுஷ்மத்[3], அஸ்மத் ஆகியவைகளுடன் இவ்வொட்டிணைக்கப்பட்டிருக்கிறது.

த்வயகா, மயகா, த்வயகி, மயகி, ஆகியவைகளில், இவ்வொட்டுத்வயா, மயா (மூன்றாம் வேற்றுமைச் சொல்) த்வயி, மயி, (7ஆம் வேற்றுமைச் சொல்) என்பவைகளுடன் வருவதைக் காணலாம். ஆகவே, ஒ, ஸ, ப[4] என்ற வெழுத்துக்களை முதலாகக் கொண்ட வேற்றுமையுருபுகள் தொடரும் போது 'அக' ஒட்டு, ப்ராதிபதிகங்களுடனும், மற்ற இடங்களில், வேற்றுமைச் சொல்லுடனும் வருமென்பது, இவ்வெடுத்துக்காட்டுக்களிலிருந்து தெளிவாகிறது.

வா: அகச் ப்ரகரணே தூஷ்ணீம: காம் ப்ரத்யய: வக்தவ்ய:

காம் ஒட்டு, 'தூஷ்ணீம்' என்ற அவ்யயத்தோடு வரும்.

தூஷ்ணீம் + கா = தூஷ்ணீ காம் ஆஸ்தே

'பேசாமல் இருக்கிறான்'

வா: ஸீலே கி மலோபஸ்'ச வக்தவ்ய:

ஆனால், அது அவன் வழக்கம் என்ற பொருளைச் சுட்டும் போது 'க' வொட்டு வரும். 'தூஷ்ணீம்' இன இறுதி 'ம்' கெடும். தூஷ்ணீக: 'மௌனமான' பசதகி, (வினைச் சொல்லுடன்)

5.3.72 கஸ்ய ச த[3]:

ஒரு அவ்யயத்தினிறுதி 'க'வுக்குப் பதிலியாக 'த[3]' 'அகச்' ஒட்டு தொடரும்போது வரும்.

தி[4]க் – த[4]கித்

ஹிருக் – ஹிரகுத்

5.3.73 அக்ஞாதே

தெரியாத ஒருவனையோ, ஒன்றையோ பற்றிக்கூறும்போது, 'க', அ/க ஒட்டுக்கள், மேற்கூறியவைகளுக்குப்பின் வரும் அக்ஞாத (தெரியாத) என்பது, ஒரு பொருளைப் பற்றியது அல்ல. அப்பொருளோடு மற்ற பொருளுக்குள்ள தொடர்பு என்பதைக் குறிக்கும்.

அஸ்வக: – 'யாருடைய குதிரை?'

உச்சகை: உயர்வான (இது பற்றி தெரியாமலிப்பது)

பசதகி 'அவன் சமைக்கிறான் அப்படியா'

5.3.74 குத்ஸிதே

ஒரு பொருளைப்பற்றி இகழ்ச்சியாகப் பேசும்போது மேலே குறிப்பிட்டவொட்டுக்கள் வரும்.

அஸ்'வக: மோசமான குதிரை

உச்சகை:, பசதகி 'மோசமாக சமைக்கிறான்'

5.3.75 ஸம்க்ஞாயாம் கன்

ஆக்கப்பட்டசொல் பெயர்ச் சொல்லாகும்போது, 'கன்' ஒட்டு மேற்கூறிய பொருளில் வரும்.

ஸூத்ரக:, த^4ாரக:

5.3.76 அனுகம்பாயாம்

இரக்கம், அன்பு ஆகியவற்றைச் சுட்டும்போது மேலே கூறியவொட்டுக்கள் வரும்.

புத்ரக:, வத்ஸக: 'பாவம், குழந்தை'

ஸ்வபிதகி 'பாவம், தூங்குகிறான்'

5.3.77 நீதௌ ச தத்^{3}யுக்தாத்

'க' அல்லது 'அகச்' ஒட்டுக்கள் முறையே, பெயர் அல்லது வினைச் சொற்களுக்குப்பின் இரக்கத்துடன் உதவுதல் அல்லது வருத்தமகற்றுதல் என்ற பொருளைச் சுட்ட இணைக்கப்படும்.

ஹந்த தே த^4ானகா: 'பார், இதோ உனக்குத் தானியம் (இருக்கிறது)

ஏஹகி – தயவு செய்து வா.

இதற்கு முந்திய சூத்திரத்தில் இவ்வொட்டுக்கள், பரிதாபத்துக்குரிய ஆள் அல்லது செயலைக் குறிக்குஞ் சொற்களோடு இணைக்கப்படுமென்பதைக் குறிக்கும் இச்சூத்திரம், பரிதாபத்தைக் குறிக்குஞ் சொல் அல்லது செயலையுணர்த்தும் சொற்களோடு இவ்வொட்டு இணைக்க வேண்டுமென்று கூறுகிறது.

5.3.78 ப^{3}ஹ்வசோ மனஷ்யராம்ன: ட^{2}ச் வா

இரண்டசைகளுக்கும் மேற்பட்ட அசைகளைக் கொண்ட, மனிதனு டைய பெயரைச் சுட்டும் சொற்கள் அல்லது இரக்கத்தைக் குறிக்குஞ் சொல் அல்லது இரக்கத்துடன் உதவுதல் என்ற பொருளைச் சுட்டுஞ் சொல் ஆகியவைகளுக்குப்பின் ட^{2}ச் (இக) ஒட்டு விருப்பாக வரும்.

தே^{3}விக: (தே^{3}வத^{3}த்த + இக = தேவிக: (5.3.83) அல்லது தே^{3}வத^{3}த்தக: 'பாவம் தேவதத்தன்'

5.3.79 க^{4}னிலசௌ ச

மேற்சூத்திரத்தில் குறிப்பிட்ட சூழ்நிலையில், க^{4}ன் (இய), இலச் (இல) ஒட்டுக்களும் வரும்.

தே^{3}விய:, அத^{3}வில:, தே^{3}விக:, தே^{3}வத^{3}த்தக:

5.3.80 ப்ராசாமுபாதே^{3}: அட^{3}ச்வுசௌ ச

கீழ்த்திசை இலக்கணக்காரர்களின் கருத்துப்படி, அட^{3}ச் (அட^3)வுச் (அக)

ஒட்டுக்கள், 'உப'வை முதலாகக் கொண்ட மனிதனின் பெயரைக் குறிக்குஞ் சொற்களுக்குப்பின் வரும். 'ச' மேற்கூறிய ஒட்டுக்களும் இச்சொல்லுடன் வருமென்பதைச் சுட்டுகிறது. மேற்கூறிய பொருட்களைத்தான், இச்சொல்லும் உணர்த்தும்.

உபேந்த்ரத^{3}த்த: (1) உபேந்த்^{3}ரத^{3}த்தக: (கன்) (2) உபிக: (ட^{2}ச்) (3) உபில: (இலச்) (4) உபிய: (க^{4}ன்) (5) உபக: (வுச்) (6) உபட^{3}: (அட^{3}ச்)

5.3.81 ஜாதிநாம்ன: கன்

ஒரு இனத்தைச் சுட்டும் (மனிதனின்) பெயருக்குப்பின் (மேற் கூறிய பொருட்களில்) கன் ஒட்டு வரும்.

வ்யாக்^{4}ரக:, ஸிம்ஹக:, வ்யாக்ர, 'புலி', ஸிம்ஹ 'சிங்கம்' என்ற விலங்குகளின் பெயர்கள் உருவணியாக மனிதனையும் குறிக்கப்படும்.

5.3.82 அஜினாந்தஸ் யோத்தரபத^{3}லோபஸ்^{1} ச

'அஜின' என்ற சொல்லையிறுதியாகக் கொண்ட மேலே கூறியவாறமைந்த மனிதனின் பெயருக்குப்பின் 'கன்' ஒட்டு 'இரங்குதல்' என்ற பொருளில் வரும். இவ்விறுதிச் சொல் கெடும்.

வ்யாக்^{4}ராஜின: = வ்யாக்^{4}ரக:

ஸிம்ஹாஜின: = ஸிம்ஹக:

5.3.83 ட^{2}ாஜாத^{3}ாதூ^{3}ர்த்^{4}வம் த்^{3}விதீயாத^{3} ச

மேலே விதிக்கப்பட்ட ட^{2}(5.3.78), அல்லது, உயிரெழுத்தை முதலாகக் கொண்ட வொட்டுக்கள் தொடர்ந்து வரும்போது மனிதனின் பெயரைக் குறிக்குஞ் சொல்லின், இரண்டாவது உயிருக்குப்பின் நிற்கும் பகுதியெல்லாம் கெடும்.

தேவதத்த + இக: = தேவிக:

இங்கு,இரண்டாவது உயிரான அ(வ)வுக்குப்பின் நிற்கும் எல்லாவெழுத்துக்களும், 'இக' தொடரும்போது கெடுகிறது. தே^{3}விய:

தே^{3}வில:

வா: சதுர்த^{2}ாத^{3}ச ஊர்த்^{4}வஸ்யலோ போ வக்தவ்ய: சில சொற்களின், நான்காவது உயிரெழுத்துக்குப்பின் நிற்கும் எழுத்துக்கள் எல்லாம் கெடும்.

ப்^{3}ருஹஸபதித^{3}த்த: – ப்^{3}ருஹஸ்பதிக:, ப்^{3}ருஹஸ்பதிய:, ப்ருஹஸ்பதில:

வா: அனஜாதௌ விப^{4}ாஷா லோபோ வக்தவ்ய: ஒரொட்டின் முதலெழுத்து உயிராக அமையாமலிருந்தால், மறைதல் விருப்பாகும்.

தே^{3}வ தத்தக:, தே^{3}விக:

வா: லோப: பூர்வபத^{3}ஸ்ய ச

ட^{2}ாஜாதாவனஜாதௌ ச வக்தவ்ய:

உயிரெழுத்தோ அல்லது வேறெழுத்துக்களையோ முதலாகக்கொண்ட

முதலியவொட்டுக்கள் தொடரும்போது, முதலுறுப்பினர் கெடும்.
தே^{3}வத^{3}த்த: – த^{3}த்திக:, த^{3}த்தில:, த^{3}த்திய: த^{3}த்தக:

வா: வினாபி ப்ரத்யயேன பூர்வ உத்தரபத^{3}யோர் விப^4ாஷா லோபோ வக்தவ்ய:
ஒட்டிணைக்காவிட்டாலும், முதல் அல்லது இறுதியுறுப்பினர் மேற்கூறிய சூழலில் விருப்பாகக் கெடும்.
தே^{3}வத^{3}த்த:– த^{3}த்த: அல்லது தே^{3}வ:

வா: உவர்ணால்ல இலஸ்ய ச
'உ' வீற்றுச் சொல்லோடு நிற்கும் 'இல' ஒட்டுக்கு 'ல' பதிலியாகும்.
ப^4ானுத^{3}த்த:– ப^4ானுல:, வஸூத^{3}த்த: – வஸூல:

வா: த்^{3}விதீயாதசோ லோபே ஸந்த்யக்ஷர த்^{3}விதீயத்வே தத^3ாதே^{3}ர் லோப வசனம்
இரண்டாவது உயிர் ஒ, ஔ,ஏ,ஐ (ஸந்த்^{4}யக்ஷர) ஆகுமானால், இவைகளின் முதலெழுத்து கெடும்.
லஹோட: > லஹிக:

வா: ஏகாக்ஷர பூர்வபதானாமுத்தர பதலோபோ வக்தவ்ய:
முதலுறுப்பினர் ஓரசை கொண்டதானால், இரண்டாமுறுப்பினர் கெடும்.
வாசிக: <வாகீ^{3}ஸ^1: (வாக் + ஈஸ^1:)
ஷடி^{3}க: (<ஷஷ்) என்ற சொல் இதற்குப்புறனடை. இது ஷட^{3}ங்கு^{3}லித தத்த: என்பதிலிருந்த ஆக்கப்பட்டது.

5.3.84 ஸே'வல ஸூபரி விஸால வருணார்யமாத்னாம் த்ருதீயாத் ஸே'வல, ஸூபரி, விஸ'ால, வருண அர்யம ஆகிய சொற்களில் தொடங்கும் மனிதனின் பெயரைச் சுட்டுஞ் சொற்களின் மூன்றாம் உயிரெழுத்தின்பின் நிற்கும் பகுதி, 'ட^2' ஒட்டு அல்லது உயிரெழுத்தை முதலாகக் கொண்ட ஒட்டுத் தொடரும்போது கெடும்.
ஸேவலிக:, ஸேவலிய:, ஸேவலில:
ஸூபரிக:, ஸூபரிய:, ஸூபரில:
விஸாலிக:, விஸாலிய:, விஸாலில:
வருணிக:, வருணலிய:, வருணில:
அர்யமிக:, அர்யமிய:, அர்யமில:

வா: ஸே'வலாதீனாம் த்ருதீயாத சோ லோப:
ஸ சாக்ருத ஸந்தீ^{4}னாமிதி வக்தவ்யம்
'ஸே'வல' முதலியவைகளின் மூன்றாம் உயிரென்பது,
புணர்ச்சி மூலம் கிடைக்கப்பெற்ற உயிரல்ல என்று குறிப்பிடவேண்டும்.

காட்டாக, ஸே^{1}வலேந்த்^{3}ர த^{3}த்த:
என்ற சொல், ஸே^{1}வல + இந்த்ர = அஸ^{1}வலேந்த்ர + த^{3}த்த = ஸேவ லேந்த்^{3}ர த^{3}த்த: இச்சொல்லிலிருந்து ஆக்கப்படும் சொல் ஸேவலிக: என்று தானாகும். அதாவது, ஸேவலவின் 'ல்'க்குப்பிறகு நிற்கும் 'அ'தான் மூன்றாவதான உயிர்.

5.3.85 அல் பே
மேலே குறிப்பிட்ட ஒட்டுக்களான 'க' (5.3.70)வும் மற்றவைகளும், 'சிறிய அளவு' என்ற பொருளைச் சுட்ட இணைக்கப்படும்.
தைலக:– 'கொஞ்சம் எண்ணெய்'
உச்சகை: 'சிறிது உயரம்'
பசதகி 'அவன் குறைவாகச் சமைக்கிறான'

5.3.86 ஹ்ரஸ்வே
மேற்கூறியவொட்டுக்கள் 'குட்டையான' அல்லது சிறிதான என்ற பொருளில் வரும்.
வ்ருக்ஷக: – 'சிறிய அல்லது குட்டையான மரம்'

5.3.87 ஸம்க்^{3}ஞாயாம் கன்
குட்டையான பொருள் ஒரு பெயராகுமானால், 'கன்' ஒட்டு வரும்.
வம்ஸக:– சிறிய மூங்கில்
த^{3}ண்ட^{3}க:– சிறிய தடி
இச்சூத்திரம் 'க' வருவதைத் தடுக்கிறது.

5.3.88 குடீ^{1}ஸ^{1}மீ ஸூ^{1}ண்ட^{3}ாப்^{4}யோ ர:
குடீ^{1}, ஸ^{1}மீ, ஸூண்ட^{3}ா ஆகியவைகளுக்குப்பின் 'குட்டை' என்ற பொருளில் 'ர' ஒட்டு வரும்.
குடீர: குட்டையான,ஸ^{1}மீர: 'குட்டையான மரம்' ஸூண்ட^{3}ார: 'குட்டையான துதிக்கை' இது 'க'வொட்டு வருவதைத் தடை செய்கிறது. இங்கு முதல் சொல் பெண்பாலாகவும் ஆக்கப்பட்ட சொல் ஆண்பாலிலும் அமையும்.

5.3.89 குத்வா டு^{3}பச்
குது 'ஜாடி' என்ற சொல்லுக்குப்பின் டு^{3}பச் (உப) ஒட்டு மேற்கூறிய பொருளில் வரும்.
குதுப: அல்லது குதுபம் 'தோலாற் செய்யப்பட்ட சிறிய எண்ணெய் வைக்கும் ஜாடி'

5.3.90 காஸூ கோ^{3}ணிப்^{4}யாம் ஷ்டரச்
காஸூ. கோணி என்ற சொற்களுக்குப்பின், ஷ்டரச் (தர) ஒட்டு சிறியது என்ற

பொருளில் வரும்.
காஸூதரீ – சிறிய ஈட்டி
கே^{3}ாணீதரீ – சிறிய சாக்கு

5.3.91 வத்ஸோக்ஷாஸ்^{1} வருஷபே^{4}ப்^{4}யஸ் ச தனுத்வே
ஷ்டரச் ஒட்டு, வத்ஸ, அஸ்^{1}வ ருஷப^4 ஆகியவைகளுக்குப்பின் 'இளமை' என்ற பொருளில் வரும்.
வத்ஸதர: 'இளங்கன்று'
உக்ஷதர: 'இனம் எருது'
அஸ்^{1}வதர: இளங்குதிரை
ருஷப^{4}தர: 'இளங்காளை'

5.3.92 கிம் யத் ததே^{3}ா நிர்த^4ாரணே த்^{3}வயோர் ஏகஸ்ய ட^{3}தரச
கிம், யத்^{3}, தத்^{3} ஆகியவைகளுக்குப் பின், 'இரண்டிலொன்று தீர்மானித்தல்' என்ற பொருளில் ட^{3}தரச் (அதர) ஒட்டு வரும். இச்சொற்களிறுதியான இம், அத் கெடும் கதரோ ப^{4}வதோ: கட^2:– உங்களிருவரில் யார் கட^2 பிராம்மணர்?
கதரோ ப^{4}வதோ: படு:– உங்களிருவரில் யார் கெட்டிக்காரன்?
யதர: ப^{4}வதோ: ததர ஆக^{3}ச்ச^{2}து 'உங்களிருவரில் யார் தேவதத்தனோ அவன் வரட்டும்' இனம், செயல், குணம், பெயர் முதலியவற்றால், ஒருவனை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக்காண்பது நிர்த்தாரணம்.

5.3.93 வா ப^{3}ஹூனாம் ஜாதி ப்ரஸ்னே ட^{3}தமச்
மேலே குறிப்பிட்ட சொற்களுக்குப்பின், ட^{3}தமச் (அதம்) ஒட்டு, பலவற்றிலிருந்து ஒன்றை இனத்தின் மூலம் வேறுபடுத்துதல் என்ற பொருளில் இணைக்கப்படும்.
கதமோ ப^{4}வதாம் கட^2: 'உங்களில் யார் கட பிராம்மணர்?'
யதமோ ப^{4}வதாம் கட^2: தம ஆக^{3}ச்ச^{2}து 'உங்களுள் யார் கட பிராம்மணனோ அவர் வரட்டும்' அகச் (5.3.71) ஒட்டும் வருமென்பதை 'வா' சுட்டும். யகோ ப^{4}வதாம் கட^2: ஆக^{3}ச்சது.

5.3.94 ஏகாச் ச ப்ராசாம்
மேலே குறிப்பிட்ட பொருட்களில் ட^{3}தரச், ட^{3}தமச் ஒட்டுக்கள், 'ஏக' என்ற சொல்லுக்குப்பின் வருமென்பது கிழக்கத்திய இலக்கணக்காரர்களின் கருத்து/
ஏகதரோ ப^{4}வதோ தே^{3}வத^{3}த்த:
உங்களிருவரில் ஒருவர் தேவதத்தன்
ஏகதமோ ப^{4}வதாம் தே^{3}வத^{3}த்த:
உங்களில் (பூன்மை) ஒருவர் தேவதத்தன்

5.3.95 அவக்ஷேபனே கன்
ஒரு பெயர்ச் சொல்லுக்குப்பின் 'கன்' 'க' ஒட்டு 'கிண்டல் அல்லது கேலியாகக்

குறிப்பிடுதல்' என்ற பொருளில் இணைக்கப்படும்.
வ்யாகரணக: 'இலக்கணத்தில் குறைந்த தேர்ச்சியுள்ள

5.3.96 இவே ப்ரதிக்ருதௌ
இதைப் போன்ற' என்ற பொருளில் 'கன்' ஒட்டு ஒரு சொல்லுக்குப்பின் 'உருவம்', 'படிமம்'
என்ற பொருளில் வரும்.
அஸ்^{1}வக: குதிரையின் உருவச்சிலை, அல்லது படிமம் ஆனால் கெ^{3}ளரிவ க^{3}வய:

5.3.97 ஸம்க்^{3}ஞாயாம் ச
(இதைப் போன்ற என்ற பொருளில் 'கன்' ஒட்டு) ஆக்கப்பட்ட சொல் ஒரு பெயரைச் சுட்டும்போது இணைக்கப்படும்.
அஸ்^{1}னக: குதிரையை நினைவூட்டும் ஒரு பொருள்

5.3.98 லுப் மனுஷ்யே
ஆக்கப்பட்ட சொல் 'மனிதன்' என்ற பொருளைச் சுட்டும்போது ஒட்டு கெடும் (லுப்) ஆயினும் அதன் எண்ணும் பாலும் கெடாது. சஞ் சா 'புல்லால் செய்யப்பட்ட மனிதன்' புல்லுரு

5.3.99 ஜீவிகார்தே^{2} ச அபண்யே
ஒருவன் பிழைப்புக்காக ஆக்கப்பட்ட உருவம் விற்பதற்காக அல்ல என்ற பொருளைச் சுட்டும்போதும், மேற்கூறியவாறு 'கன்' ஒட்டு கெடும்.
வாஸுதே^{3}வ: 'பிழைப்புக்காக ஆக்கப்பட்ட வாஸுதேவனின் உருவ ச் சிலை' ஆனால் அஸ்^{1}வகான் விக்ரீணாதி 'குதிரைகளின் உருவச்சிலைகளை விற்கிறான்'

5.3.100 தே^{3}வ பத^{2}ாதி^{3}ப்^{4}யஸ்^{1} ச
'தே^{2}வ பத^{2}' முதலிய சொற்களுக்குப்பின் நிற்கும் உருவம் என்ற பொருளைச் சுட்டும் கன் ஒட்டு (5.3.96, 97) மேற்கூறியவாறு கெடும்
தே^{3}வ பத^{2}: – இடப்பெயர்

5.3.101 வஸ்தேர் ட^{3}ஞ்
ட^{3}ஞ் (ஏய) என்ற வொட்டு வஸ்தி என்ற சொல்லுக்குப்பின் இதைப்போன்ற என்ற பொருளில் வரும்
வாஸ்தேய: 'வயிறு போன்ற'
வாஸ்தேயீ (பெண்பால்)

இச்சூத்திரத்திலிருந்து, விளக்கப்படும் ஒட்டுக்கள் பொதுவான பொருளைக் குறிப்பதாகும். உருவத்தைக் குறிப்பதல்ல.

5.3.102 ஸிலாயா ட^{3}

'ஸிலா'வென்ற சொல்லுக்குப்பின், ட^{3}(ஏய) என்றவொட்டு 'இதைப்போன்ற' என்ற பொருளில் வரும்.

ஸி'லேயம் த^{3}தி^{4} 'கல்லைப்போன்ற கெட்டியான தயிர்' ஸை'லேயம் (மற்றவர்களின் கருத்துப்படி)

5.3.103 ஸா'க^{2}ாதி^{3}ப்^{4}யோ ய: (யத்)

'யத்' ஒட்டு 'ஸாக^{2}ா' முதலியவைகளுக்குப்பின் 'இதைப் போன்ற' வென்ற பொருளில் வரும்.

ஸா'க்^{2}ய: 'கிளைபோன்ற'

முக்^{2}ய: 'முகத்தைப்போன்ற'

5.3.104 த்^{3}ரவியம் ச ப^{4}வ்யே

'த்^{3}ரவ்ய' என்ற சொல் 'அழகான' என்ற பொருளில் நிபாதனமாகும்.

த்^{3}ரவ்ய (த்^{3}ரு + யத்)

த்^{3}ரவ்யோ அயம் ராஜபுத்ர:

'எவ்வளவு அழகானவன் இந்த அரச குமாரன்'

5.3.105 குஸா'க்^{3}ராச் ச^{2}:

'குஸா'க்^{2}ர' என்ற சொல்லுக்குப்பின் ச^{2} (ஈய) ஒட்டு 'இதைப்போன்ற' என்ற பொருளில் வரும்.

குஸா'க்^{3}ரீயா பு^{3}த்^{3}தி^{4}: 'குலத்தின் நுனி போன்ற கூர்மையான புத்தி'

5.3.106 ஸமாஸாச் ச தத்^{3}விஷயாத்

'இதைப்போன்ற' என்ற பொருளில் ச^{2} (ஈய) ஒட்டு, ஒரு தொகைக்குப்பின் அத்தொகையே, 'இதைப்போன்ற' என்ற பொருளிலமையும்போது இணைக்கப்படும்.

காகதாலீயம் – காகம் உட்காரப் பனம்பழம் கீழே விழுவதைப் போன்ற, தற்செயலாய் நிகழ்வதான

5.3.107 ஸா'ர்கராதி^{3}ப்^{4}யோ அண்

'ஸா'ர்கரா' முதலிய சொற்களுக்குப்பின் 'அண்' (அ) ஒட்டு, 'இதைப் போன்ற' என்ற பொருளில் வரும்.

ஸார்கரம்

5.3.108 அங்கு^{3}ல்யாதி^{3}ப்^{4}யஸ் ட^{2}க்

'அங்குலீ' முதலிய சொற்களுக்குப்பின் ட^{2}க் (இக், க) ஒட்டு இதைப்போன்ற என்ற பொருளில் வரும்.

ஆங்கு^{3}லிக:, அங்கு^{3}விய:

5.3.109 ஏக ஸா'லாயாஸ் ட2ஜ் அன்யதரஸ்யாம்
('இதைப்போன்ற' என்ற பொருளில்) 'ஏகஸா'லா' என்ற சொல்லுக்குப்பின் ட2ச் (இக) விருப்பாக வரும்.
ஏகஸா'லிக: (ட2ச்) அல்லது
ஐகஸா'லிக: (ட2க்)

5.3.110 கர்க லோஹிதாத்3 ஈகக்
கர்க, லோஹித என்ற சொற்களக்குப்பின் 'ஈகக்' 'இதைப்போன்ற' என்ற பொருளில் வரும்.
கார்கீக: வெள்ளைக் குதிரை போன்ற
லௌஹிதீக:, ஸ்படிக:

5.3.111 ப்ரஸ்'க பூர்வ வில்வ இமாத்த2ால் ச2ந்தஸி
வேத மொழியில் ப்ரஸ்'ன, பூர்வ, விஸ்'வ, இம ஆகியவைகளுக்குப் பின் இதைப்போன்ற என்ற பொருளில் 'த2ால்' ஒட்டு வரும்.
ப்ரஸ்'னத2ா
பூர்வத2ா
விஸ்வத2ா
இமதா2

5.3.112 பூர்வாஞ்ஞ்யோ அக்3ராமண் பூர்வாத்
'நாடோடி இனக்குழுவினர்' என்ற பொருளைச் சுட்டும் சொல்லுக்குப்பின் 'ஞ்ய' (=ய) ஒட்டு பொருள் மாற்றமில்லாமல் இணைக்கப்படும். அக்குழுவின் தலைவனின் பெயரிலிருந்து தருவிக்கப்பட்ட சொல்லாக அமையாதிருந்தால் தான் இவ்வொட்டிணைக்கப்படும்.
லௌஹத்4வஜ்ய ஸைப்3ய:
ஆனால் தே3வத3த்தக – தேவதத்தனைத்தலைவனாகக் கொண்ட குழு

5.3.113 வ்ராதச் ப2ஞௌரஸ்த்ரியாம்
'வ்ராத' கொடுந் தொழில் மூலம் பிழைக்கும் குழுவினர் என்ற சொல், ச்ப2ஞ் (ஆயன 4.1.98) ஒட்டை யீறாகக் கொண்ட சொல் ஆகியவற்றிற்குப்பின் 'ஞ்ய' ஒட்டு பொருள் மாற்றமில்லாமல் வரும். ஆனால் பெண்பாலிலல்ல.
காபோத பாக்ய: 'புறாக்களைக் கொன்று வாழும் குழுவினர்'
க்ரௌஞ்ஜாயன்ய: (ச்ப2ஞ்' இல்முடியுஞ் சொல்)
'க்ரௌஞ்ச பட்சியைக் கொன்று வாழும் குழுவினர்' ஆனால் கபோதபாக், க்ரௌஞ்ஜாயனீ

5.3.114 ஆயுத4ஜீவீ ஸங்க4ாஞ் ஞ்யட3 வாஹீகேஷ்வப்3ராஹ்மண ராஜன்யாத்
ஆயுதம் விற்றுப்பிழைக்குங் குழுவினரைக் குறிக்குஞ் சொல்லுக்குப்பின் 'ஞ்யட்' ஒட்டு வரும். இக்குழு வாஹீககர்களின் பெயரைச் சுட்டும்போது

மட்டுந்தான், இவ்வொட்டிணைக்கப்படும் அச்சொல் பிராம்மணன் அல்லது ராஜன்யன் என்ற பெயரைச்சுட்டும்போது இவ்வொட்டு வராது.

கௌண்டீ^{3}ப்^{3}ருஸ்ய:

க்ஷௌத்^{3}ரக்ய:

ஆனால் மல்லா: 'ஆயுதஜீவி' அல்ல

ஸ'ப^{3}ரா:, புலிந்த^{3}ா:

கோபலவா ப்^{3}ராம்மணா:

ஸாலங்காயனா ராஜன்ய:

5.3.115 வ்ருகாட்டேண் யண்

'வ்ருக' (ஆயுதஜீவி) என்ற சொல்லுக்குப்பின் டேண்யண் (ஏண்ய பெண்பால், 'ஈ' ஒட்டு இணைந்து ஆக்கப்படும்) ஒட்டு வரும்.

வார்கேண்ய:, வார்கேணீ (பெண்பால்)

5.3.116 த^{3}ாமன் யாதி^{3}த்ரிகர்தஷஷ்ட^{2}ாச்'ச^{2}:

'த^{3}ாமனீ' முதலிய சொற்களுக்குப் பின்னும் த்ரிக^{3}ர்தஷஷ்ட என்ற ஆறு போர் வீரர்களின் இனப் பெயர்களுக்குப்பின்னும் ச^{2}(ஈய) ஒட்டு வரும்.

த்ரிக^{3}ர்தஷஷ்ட – கௌண்டே^{3}ா பரத^{2}, த^{3}ாண்டகீ, க்ரௌஷ்டி^{2}க:, ஜ^{3}ாலமானி, ப்^{4}/ப்^{3}ரஹ்மகு^{3}ப்த, ஜானகி.

த^{3}ாமனீய:, ஔவபீய:

கௌண்டே^{3}ாபரதீ^{2}ய:, க^{3}ாண்டகீய:, க்ரௌஷ்டி'கீய: ஜாலமானீய: ப்^{3}ரஹ்மகு^{3}ப்தீய:, ஜானகீய:

5.3.117 பர்ஸ்வாதி^{3}யௌதே^{4}யா தி^{3}ப்^{4}யாமணஞௌ

பர்ஸு^{1} முதலிய சொற்களுக்குப்பின் 'அண்' ஒட்டும், யௌதே^{4}ய முதலியவைகளுக்குப்பின் 'அஞ்' ஒட்டும் (தனது பொருள் மாறாமல், போர் வீரர்கள் என்ற பொருளில்) வரும்.

பார்ஸ'வ:, ஆஸுர:

யௌதே^{4}ய:, கௌஸே'ய:

5.3.118 அபி^{4}ஜித்^{3} பி^{3}த^{3} ப்^{4}ருத்ச்ச^{2}ாலாவச்'சி^{2}கா வச்'சம் வதூ^{3}ர்ணா வ'ச^{2}ரு மத^{3}ணோ யஞ்

அபி^{4}ஜித், பி^{3}த^{3}ப்^{4}ருத், ஸ'ாலாவத் ஸி'க^{2}ாவத், ஸ'மீவத்,ஊர்ணாவத் ஸ்'ருமத் ஆகியவற்றிற்குப்பின் 'யஞ்' ஒட்டு, இச்சொற்கள் 'அண்' ஒட்டை யீறாகக் கொண்டு நிற்கும்போது வரும்.

அபி^{4}ஜித் + அண் = ஆபி^{4}ஜித் + யஞ் = ஆபிசஜித்ய:

பை^{3}த^{3}ப்ருத்ய:, ஸ'ாவத்ய:,

ஸை'க^{2}ாவத்ய: ஸாமீவத்ய:,

ஔர்ணாவத்ய:, ஸ்'ரௌமத்ய:

5.3.119 ஞ்யாத^{3}வஸ் தத்^{3}ராஜா

'ஞ்யா' முதலியவொட்டுக்கள் (5.3.112 இலிருந்து தொடங்கி, விளக்க ப்பட்டிருக்கும் ஒட்டுக்கள்) 'தத்^{3}ராஜா' ஒட்டுக்கள் என்ற பெயரால் அழைக்கப்படும்.

5.4.1 பாத ஸ'தஸ்ய ஸங்க்^{2}யாதேர் வீப்ஸாயாம் வுன் லோபஸ்' ச

எண்ணுப்பெயரை முதலாகக் கொண்ட பாத, ஸ'த என்ற சொற்களுக்குப்பின் வுன் (அக) ஒட்டு 'பங்கிட்டளித்தல்' என்ற பொருளில் வரும். அடிச்சொல்லின் ஈறும் கெடும். த்^{3}விபதி^{3}காம் த^{3}த^{3}ாதி (த்^{3}விபாத + வுன் = த்^{3}வி பாத்^{3} + வுன் = த்^{3}விபத் + வுன் = த்^{3}விபதி^{3}கா) (7.3.44) ஒவ்வொருவர்க்கும் இரண்டு கால் பங்கு கொடுக்கிறான். த்^{3}விஸதி காம் த^{3}த^{3}ாதி (த்^{3}வே த்^{3}வே ஸ'தே த^{3}த^{3}ாதி) ஒவ்வொருவருக்கும், 200, 200 பங்கிட்டளிக்கிறான்.

5.4.2 த^{3}ண்ட வ்யவ ஸர்க^{3}யோஸ்' ச

மேற்குறிப்பிட்ட சொற்களோடு 'வுன்' ஒட்டு, 'தண்டனை' அல்லது பரிசில்' என்ற பொருளைச் சுட்டுமாறும் வரும். த்^{3}விபதி^{3}கான் த^{3}ண்டித: இரண்டு கால் (நாணயங்கள்) தண்டிக்கப்பட்டான்

த்விபதிகாம் வ்பவஸ்குஜதி இரண்டுகால் (நாணயம்) தானமளிக்கிறான்.

த்^{3}விஸ'திகாம் த^{3}ண்டித: 200 அபராதம் விதிக்கப்பட்டது த்^{3}விஸ'திகாம் வ்யவஸ்ருஜதி

5.4.3 ஸ்து^{2}லாதி^{3}ப்^{4}ய: ப்ராகார வசனே கன்

'ஸ்தூ^{2}ல' முதலிய சொற்களுக்குப்பின் 'கன்' (க) ஒட்டு 'அதைப்போன்றது அல்லது சிறப்பு' என்ற பொருளில் வரும்.

ஸ்தூ^{2}லக: 'பருமனான' அணுக: 'அணுவைப் போன்ற'

வா: கன்ப்ரகரணே சஞ்சத், ப்^{3}ருஹதோ ருபஸம்க்^{2}யானம்

ஸ்தூல வகுப்பில் சஞ்சத், ப்^{3}ருஹத் என்ற சொற்களும் சேரும்.

சஞ்சத்க: ப்^{3}ருஹத்க:

சஞ்சத், ப்ருஹத் அல்ல

சஞ்சா, ப்^{3}ருஹா என்பது சிலரின் கருத்து. ஆகவே, சஞ்சக: ப்ருஹக: என்று ஆக்கப்பட்ட சொற்களாகும்.

5.4.4 அனத்யந்தக^{3}தௌ க்தாத்

'க்த' வை ஈறாகக் கொண்ட சொற்களுக்குப்பின், அது இன்னும் முடிவுறவில்லை'யென்ற பொருளில் 'கன்' ஒட்டு இணைக்கப்படும். பி^{4}ன்னக: (பி^{4}ன்ன + கன்) 'இன்னும் முழுவதும் பிளவுபடவில்லை' சி^{2}ன்னக: 'முழுவதும் உடைக்கப்படவில்லை' மாற்று வடிவங்கள்

பி^{4}ன்னம் – முழுவதும் பிளக்கப்பட்டது

சி^{2}ன்னக: – முழுவதும் உடைக்கப்பட்டது

5.4.5 ந ஸாமிவசனே

'அரை' என்ற பொருளை யுணர்த்தும் சொற்கள் (க்த வையீறாகக் கொண்ட சொற்களுக்கு) முன் நிற்கும்போது 'கன்' ஒட்டு இணைக்கப்படமாட்டாது.

ஸாமிக்ருதம் – 'பாதி செய்யப்பட்டது'

ஸாமி பு^{4}க்தம் – 'பாதி உண்ணப்பட்டது'

அர்த^{4}க்ருதம், அர்த^{4}பு^{4}க்தம்

இங்கு ஒட்டு இணைக்கப்படவில்லை. 'பாதி' என்ற சொல்லே, செயல் முடிவுறவில்லையென்று சுட்டும். ஆகையால் இச்சூத்திரம் தேவையில்லையேயென்ற வினாவெழுப்பலாம். தனது பொருளைச் சுட்டும்போது 'கன்' ஒட்டு வரும் என்பதைத் தடுப்பதற்குத்தான் இச்சூத்திரம் பி^{4}ன்னதர, பி^{4}ன்னதம என்ற சொற்கள். அவைகளால் உணர்த்தப்படும் செயல் முடிவுபெற்றதல்லவென்று சுட்டும் இச்சொற்கள். 'கன்' ஒட்டு சேர்க்கப்பட்டு பி^{4}ன்னதரக:, பி^{4}ன்னதமக: என்றாகும்.

'ஸாமி' யென்ற சொல்லோடு சேர்த்து ஆக்கப்பட்ட தொகையோடும் 'கன்' ஒட்டு வருவதற்குத் தடை விதிக்கிறது இச்சூத்திரம். இச்சூத்திரம் மறைமுகமாக (க்^{3}ஞாபக) 'கன்' ஒட்டு தனது பொருளைச் (ஸ்வார்த^{2}) சுட்டுமாறும் வரும் என்று குறிப்பிடுகிறது.

5.4.6 ப்^{3}ருஹத்யா ஆச்ச^{2}ாத^{3}னே

'ப்^{3}ருஹத்' என்ற சொல்லோடு 'கன்' ஒட்டு 'உடை'யென்ற பொருளில் வரும். ப்^{3}ருஹதிகா (ப்^{3}ருயதீ + கன்) 'மேலாடை' 7.4.13 இன்படி 'ப்^{3}ருஹதீ'யின் இறுதி 'ஈ' குறிலாகும். ஆனால் ப்^{3}ருஹத் ச^{2}ந்த^{3}:

5.4.7 அஷட^{3}க்ஷாஸிதம் கவலங்கர்மாலம் புருஷாத்^{4}யுத்தர பத^{3}ாத்க^{2}:

அஷடக்ஷ, ஆஸிதங்கு^{3}, அலங்கர்ம, அலம்புருஷ, 'அதி^{4}'யை யீறாகக் கொண்ட சொல், ஆகியவைகளுக்குப்பின் க^{2}(ஈன) ஒட்டு வரும்.

'க^{2}' ஒட்டும் ஸ்வார்த^{2} ஒட்டாகும். அஷட^{3}க்ஷீண: மந்த்ர: 'ஆறு கண்கள் கொண்டதல்லாத ரகசியம்' அதாவது இரண்டு ஆட்களுக்கு மட்டும் தெரிந்தது.

அஷட^{3}க்ஷ – ஆறு கண்களைக் கொண்டதல்லாதது (அஷட^{3}க்ஷ + க^{2} = அஷட^{3}க்ஷீண)

ஆஸிதம் க^{3}வீனம் அரண்யம் 'முன்பு பசுக்கள் (புல்) மேய்ந்த காடு'

அலங்கர்மீண: – 'எச்செயலையும் செய்யும் திறமையுள்ளவன், திறமைசாலி'

அலம்புருஷீண: 'மனிதனுக்குத் தகுந்த'

ராஜாதீ^{4}ன: 'அரசனுக்குக் கட்டுப்பட்டவன்'

இவ்வொட்டு, ஸ்வார்திகமாகவும் கட்டாயமாக வரக்கூடியதாகவும் (நித்ய) கருதப்படும். இதைப் போன்ற மற்ற வொட்டுக்கள் 'தமப்' இலிருந்து கன் வரை 5.3.55–95) 'ஞ்ய' – வுன் (5.3.112 – 5.4.1) ஆம் மயட் (5.4.11–21). 5.4.6 'கன்' 9 (க^{2}ன) தொகை யிறுதியொட்டுக்கள்.

5.4.8 விப^{4}ஷாஞ்சேர் அதி^{3}க் ஸ்த்ரியாம்

பெண்பாலைச் சுட்டும் திசையைக் குறிக்குஞ் சொல்லல்லாத 'அஞ்ச்' ஈறாகக் கொண்ட சொல்லுக்குப்பின் 'க^{2}' ஒட்டு விருப்பாக பொருள்மாற்றமேற்படாமல், இணைக்கப்படும். ப்ராசீனம் 'பழமையான'

அர்வாசீனம் 'புதிய'

ஆனால் ப்ராசீ தி^{3}க் 'கிழக்குத் திசை'

ப்ரதீசீ தி^{3}க் 'மேற்கு'

ப்ராசீனம் தி^{3}க்^{3}ரமணீயம். இங்கு 'ப்ராக்' என்ற சொல் இவ்வொ ட்டோடு வரும். ஏனென்றால், இது 'நபும்ஸகம்' பெண்பாற் சொல்லல்ல.

5.4.9 ஜாத்யந்தாச் ச^{2}ப^{3}ந்து^{4}னி

'ஜாதி' என்ற சொல்லை யீறாகக் கொண்ட அடிச்சொல்லுக்குப் பின் ச^{2} (ஈய) ஒட்டு (பொருள்மாற்றமில்லாமல்) 'பொருத்தமான' என்ற பொருளைச் சுட்டுமாறு வரும்.

ப்^{3}ராஹ்மண ஜாதீய: – 'பிராம்மணனுக்குப் பொருத்தமான' அல்லது தகுந்த' ஆனால் ப்^{3}ராஹ்மணஜாதி; ஸோபனா 'பிராம்மணசாதிபழகானது'

5.4.10 ஸ்த^{2}ானாந்தாத்^{3} விப^{4}ஷா ஸஸ்த^{2}ானேனேதி சேத்

'ஸ்த^{2}ான' என்ற சொல்லை யீறாகக் கொண்ட தொகைக்குப்பின் 'ச^{2}' ஒட்டு விருப்பாக வரும். 'அதன் இடத்தில் நிற்கும்' அல்லது அதற்குச் சமமான இடத்தையடையும் என்ற பொருளை அத்தொகை சுட்டும்.

பித்ரு^{1}ஸ்த^{2}ானீய: அல்லது பித்ரு^{1}ஸ்த^{2}ான:

அவன் தகப்பனுடைய இடத்தில் நிற்கிறான். அதாவது அவன் தகப்பனுக்கு ஒத்தவன். மாற்றாக கே^{3}ாஸ்த^{2}ானம் – மாட்டுத் தொழுவம்

5.4.11 கிம் ஏத் திங் அவ்யய க^{4}ாத^{3}ாம் வத்^{3}ரவ்ய ப்ரகர்ஷே

'கிம்' 'எது, என்ன, யார்', வினைச் சொற்கள், அவ்யயம் ஆகியவைகளைத் தொடர்ந்து வரும் க^{4} (தரப்,தமப்) ஒட்டிற்குப்பின் 'ஆமு' என்ற ஒட்டு, 'க^{4}' ஒரு பொருளையே சுட்டாமல் நிற்கும் போது வரும். கிம்தராம் அல்லது கிம்தமாம் பூர்வாஹ்ணே தராம் அல்லது பூர்வாஹ்ணே தமாம் காலையில் இன்னுங் கூடுதலான அல்லது ஏற்ற மிகுதியான பசதிதராம் அல்லது பசதிதமாம். அவன் சிறப்பாக அல்லது மிகச் சிறப்பாக சமைக்கிறான். உச்சைஸ்தராம் அல்லது உச்சைஸ்தமாம் மிகஉயர்ந்த ஆனால் உச்சைஸ்தராம் அல்லது உச்சைஸ்தம: தரு: 'மிகவும் உயரமான மரம்' இது அதிகமான உயரம். மரத்திற்குரியது.

5.4.12 அமு சச்ச^{2}ந்தஸி

மேற்கூறிய சூழலில் 'அமு' (அம்) ஒட்டும், வேதமொழியில் வரும்.

'கிம் 'ஏ' யீற்றுச் சொற்கள், வினைச் சொற்கள், அவ்யயம், தர, தம ஒட்டுக்களில் முடியுஞ் சொற்கள் ஆகியவற்றோடு வேதமொழியில் 'அம்'

ஒட்டும் இணைக்கப்படும்.
ப்ரதராம் நயாம:– 'நாங்கள் இன்னும் முன்னால் போகிறோம்'

5.4.13 அனுக^3ாதி^{3}னஷ் ட^{2}க்

'அனுக^3ாதி^{3}ன்' என்ற சொல்லுக்குப்பின் ட^{2}க் (இக) ஒட்டு பொருள் மாற்றமில்லாமல் இணைக்கப்படும்.

ஆனுக^3ாதி^{3}க: மந்திரங்களைத் திருப்பி (திருப்பி)ச் சொல்பவன்

5.4.14 ணச: ஸ்த்ரியாம் அஞ்

ணச் (அ) ஒட்டில் முடியுஞ் சொற்களுக்குப்பின் 'அஞ்' ஒட்டு (பொருள் மாற்றமில்லாமல்) அச்சொல் பெண்பாலாக அமையுமானால் வரும்.

வ்யாவக்ரோஸீ வர்ததே – ஒருவரையொருவர் திட்டிக் கொள்கிறார்கள்
வ்யாவஹாஸீ – பரஸ்பரச் சிரிப்பு

'ஸ்த்ரீ' திரும்பவும் இச்சூத்திரத்தில் பயன்படுத்தியதன் காரணம், இது ஞாபகமாக.

5.4.15 அண் இனுண:

'இநுண்' ஒட்டில் முடியுமடிச் சொற்களுக்குப்பின் பொருள் மாற்றமில்லாமல் 'அண்' ஒட்டு வரும்.

ஸாம்ராவினம் 'பெருங்கூச்சல்'
ஸாங்க'டினம் – பெருந்தீ

5.4.16 விஸாரிணோ மத்ஸ்யே

'விஸாரின்' என்ற சொல்லுக்குப்பின் 'அண்' ஒட்டு, ஆக்கப்பட்ட சொல் 'மீன்' என்ற பொருளைச் சுட்டும்போது வரும்.

வைஸாரிண: 'மீன்'
ஆனால் விஸாரீ தே^{3}வதத்த: நழுவிச் செல்கிற தேவதத்தன்

5.4.17 ஸம்க்^{2}யா யா: க்ரியாப்^{4}யாவ்ருதி க^{3}ணனே க்ருத்வஸுச்' (க்ருத்வஸ)

என்ற ஒட்டு, ஒரு செயல் எவ்வளவு முறைத் திரும்பச் செய்யப்படுகிறது என்று குறிப்பிடும்போது இணைக்கப்படும். பஞ்ச க்ருத்வோ பு^{4}ங்க்தே 'அவன் ஐந்து முறை சாப்பிடுகிறான்' இச்சூத்திரத்தில் காணப்படும் 'க்ரியா' என்ற சொல் தொடர்ந்து வரும் சூத்திரங்களில் அனுவிருத்தி மூலம் பயன்படுத்துவதற்காக, சூ.19இல், இவ்வொட்டு எவ்வளவு முறை ஒரு செயல் செய்யப்படுகிறது என்று கணக்கிடுவதைச் சுட்டத்தான் பயன்படுத்தப்படும். ஒரு செயல் எவ்வளவு முறை திரும்பச் செய்யப்படுகிறது என்று கணக்கிட அல்ல.

5.4.18 த்^{3}வி த்ரி சதுர்ப்^{4}யோ: ஸுச்

த்^{3}வி, த்ரி, சதுர் என்ற எண்ணுப் பெயர்களுக்குப்பின் ஸுச் (ஸ்) ஒட்டு எவ்வளவு முறை ஒரு செயலைத் திரும்பிச் செய்தலைக் கணக்கிட்டுக்

கூறும்போது வரும்.

த்^{3}வி: பு^{4}ங்க்தே இருமுறை உண்கிறான்

த்ரி: பு^{4}ங்க்தே மூன்று முறை உண்கிறான்

சதுர் பு^{4}ங்க்தம் நான்கு முறை உண்கிறான்

5.4.19 ஏகஸ்ய ஸக்ருச் ச

'ஏக' என்ற சொல்லுக்கு 'ஸக்ருத்' என்ற சொல் 'ஸுச்' ஒட்டிணைக்கும்போது ஆதேசமாகும். ஒரு செயல் எவ்வளவு முறை செய்யப்பட்டது என்று கணக்கிடுவது என்ற பொருளை அச் சொல் சுட்டும்.

ஸக்ருத்^{3}பு^{4}ங்க்தே 'ஒரு முறை உண்கிறான்'

இங்கு 'திரும்பிச் செய்தல்' என்பது முடியாததால், செயலை மாத்திரந்தான் கணக்கிடப்படும்.

5.4.20 விப^{4}ாஷா ப^{3}ஹோர்த்^{3}த^{4}ா அவிப்ரக்ருஷ்டகாலே

'த^{4}ா' ஒட்டு, ப^{3}ஹு என்று சொல்லுக்குப்பின் திரும்பச் செய்யும் (அல்லது நிகழும்) செயலைக் குறிக்க விருப்பாக இணைக்கப்படும். அச்செயல்களுக்கிடையே அதிக இடைவெளியில்லாமலிருக்கும்போது தான் இவ்வொட்டிணைக்கப்படும். ப^{3}ஹுத^{4}ா அல்லது ப^{3}ஹுக்ருத்வ தி^{3}வஸஸ்ய பு^{4}ங்க்தே 'அவன் ஒரு நாளில் பலமுறை உண்கிறான்' ஆனால் ப^{3}ஹுக்ருத்வோ மாஸஸ்ய பு^{4}ங்க்தே 'அவன் ஒரு மாதத்தில் பலமுறையுண்கிறான்.

5.4.21 தத் ப்ரக்ருத வசனே மயட்

அதால் செய்யப்பட்டது' என்ற பொருளில் 'மயட்' ஒட்டு முதல் வேற்றுமைச் சொல்லுக்குப்பின் வரும்.

அன்னமயம் – நிறைந்த அளவு உணவு

'ப்ரக்ருதம்' – 'மிகுதியைச் சுட்டும்

அன்னமயோ யக்ஞ 'மிகுதியான உணவு படைக்கும் விருந்து' இச்சூத்திரத்தில் காணப்படும் 'வசன' என்ற சொல், இரு பொருட்களைக் கொடுக்கும். 'ல்யுட்' ஒட்டினாலாக்கப்பட்ட சொல்லாகையால் இச்சொல் இயற்கை (3.1.114) இடம் ஆகிய இரு பொருட்களைச் சுட்டும். ஆகவே தத் ப்ருக்ருதவசனம் என்பது (1) அப்பொருள் மிகுதியாகக் காணப்படுவது என்பதைக் கூறுதல்: காட்டாக அன்னமயம் மிகுதியான உணவு. (2)சில (பொருள்) அந்த இடத்தில் மிகுதியாகக் காணப்படுவதைக் குறிப்பிடுதல். காட்டாக அன்னமய: யக்ஞ: அதிக அளவில் உணவு அளிக்கப்படும் வேள்வி.

5.4.22 ஸமூஹவச் ச ப^{3}ஹுஷு

'மிகுதியானது' என்ற பொருளைச் சுட்டும் ஒட்டுக்கள் (4.2.37) (அதனாலாக்கப்பட்டது என்று சுட்டுஞ் சொல்) ஒரு குவியலைக் குறிக்குமானால் இணைக்கப்படும். மயட் ஒட்டும் இச்சூழலில் வருமென்பதை

'ச' சுட்டுகிறது. மௌளத^{3}கிகம், மோதகமயம் 'மிகுதியாக மோதங்களைக் கொண்டது'
ஸா'ஷ்குலிகம், ஸஷ்குலீமயம்

5.4.23 அனந்தாவஸதே^{2}திஹ பே^{4}ஷ ஜாஞ் ஞ்ய:
அனந்த, ஆவஸத^{2}, இதிஹ, பே^{4}ஷஜ என்ற சொற்களோடு 'ஞ்ய' (ய) ஒட்டு பொருள் மாற்றமில்லாமல் இணைக்கப்படும்.
ஆனந்த்யம் – முடிவில்லாதது
ஆவஸத்^{2}யம் – இருப்பிடம்
ஐதிஹ்யம் – வரலாறு, மரபு
பை^{4}ஷஜ்யம் – மருந்து, பரிகாரம்

5.4.24 தே^{3}வதாந்தாத்தாத^{3}ர்த்^{2}யே யத்
'தேவதா' (கடவுள்) என்ற சொல்லை யிறுதியுறுப்பினராகக் கொண்ட ^{4}ஆம் வேற்றுமைச் சொல்லுக்குப்பின் 'யத்' ஒட்டு 'அதன் பொருட்டு' என்ற பொருளில் இணைக்கப்படும் அக்னிதை^{3} வத்யம் 'அக்னி தேவதைக்காகப் படைக்கப்பட்ட' பித்ருதை^{3}வத்யம்

5.4.25 பாத^{3}ார்க^{4}ாப்^{4}யாம் ச
மேற்கூறிய சூழலில் அவ்வொட்டு பாத^{3}, அர்க்^{4}ய என்ற சொற்களுக்குப்பின் வரும்.
பாத்^{3}யம் – 'கால் கழுவுதல் என்ற பூசைக்குரித்தான தண்ணீர்'
அர்க்யம் – 'விருந்தாளியை மரியாதையுடன் வரவேற்குந் தருணத்தில் அளிக்கப்படும் தண்ணீர் வஸு, அயஸ், ஒக, கவி, க்ஷேம, உம^{3}க, வர்சஸ், நிஷ்கேவல, உக்த^{2}, ஜன, பூர்வ, நவ, ஸூர, மர்த, யவிஷ்ட^{2} ஆகியவற்றிற்குப்பின், 'யத்' ஒட்டு, வேதமொழியில் வரும்.
வஸவ்ய:, அயஸ்ய:, ஒக்ய:, கவ்ய:, க்ஷேம்ய:, உத^{3}க்யம், வர்சஸ்ய:, நிஷ்கேவல்யம், உக்த^{2}யம், ஜன்ய:, பூர்வ்ய:, நவ்ய:, ஸூர்ய:, மர்த்ய:, யவிஷ்ட்ய:

வா: ஆமுஷ்யாயணாமுஷ்ய புத்ரிகேத்யுப ஸங்க்யானம்
ஆமுஷ்யாயண, ஆமுஷ்யுபுத்ரிகா என்ற சொற்களுமித்துடன் சேர்க்கப்பட வேண்டும்.

வா: ஸமஸ்ப^{3}த^{3}ாத^{3}ாவது ப்ரத்யயோ வக்தவ்ய:
'ஆவது' ஒட்டு 'ஸம' என்ற சொல்லுக்குப்பின் வரும். ஸமாவத்^{3} க்^{3}ரு ஹ்ணாதி

வா: நவஸ்ய நூ ஆதே^{3}ஸ: த்னப்தனக^{2}ாஸ்^{1} ச ப்ரத்யயா:
'நவ'வுக்கு 'நூ' ஆதேசமாகும். த்ன. தன, க^{2}ா ஒட்டுக்கள் இத்துடன் இணைக்கப்படும். நூத்னம், நூதனம், நவீனம் – 'புதியது'

வா: நஸ்'ச புராணே ப்ராத்

'பழைய' என்ற பொருளைச் சுட்டும் 'ப்ர' என்ற சொல்லுக்குப்பின் 'ந' ஒட்டும் வரும். அதாவது த்ன, தன 'க^{2}' ஒட்டுக்களும், 'ந' ஒட்டும் வரும். ப்ரணம், ப்ரத்னம், ப்ரதனம், ப்ரீணம் 'பழைமையானது'

வா: ப^{4}ாக^{3} ரூப நாமப்^{4}யோ: தே^{4}ய: ப்ரத்யயோ வக்தவ்ய:

'தே^{4}ய' ஒட்டு ப^{4}ாக^{3}, ரூப, நாம என்ற சொற்களோடு வரும்.

ப^{4}ாக^{3}தே^{4}யம், ரூபதே^{4}யம், நாமதே^{4}யம்

வா: மித்ராச்ச^{2}ந்த^{3}ஸி வேத மொழியில், 'மித்ர' என்ற சொல்லுக்குப்பின். 'தே^{4}ய' ஒட்டு வரும். மித்ரதே^{4}யம்

வா: ஆக்னீத்^{4}ர ஸாத^{4}ாரணாத^{3}ஞ்

ஆக்^{3}னீத்^{4}ர, ஸாத^{4}ாரண என்ற சொற்களோடு 'அஞ்' ஒட்டு வரும்.

ஆக்^{3}னித்^{4}ரம், ஸாத^{4}ாரணம்

ஆக்^{3}னித்^{4}ர, ஸாத^{4}ாரணீ (பெண்பால்)

வா: அயவஸ மருத்^{3}ப்^{4}யாம் ச^{2}ந்த^{2}ஸ்யஞ் வக்தவ்ய:

அயவஸ, மருத் ஆகியவைகளுக்குப்பின் 'அஞ்' ஒட்டு வேதமொழியில் வரும்.

ஆயவஸம், மாருதம்

5.4.26 அதிதே^{2}ர்ஞ்ய:

அதிதி^{2} என்ற சொல்லுக்குப்பின் மேலே குறிப்பிட்ட பொருளில் 'ஞ்ய' ஒட்டு வரும். ஆதித்^{2}யம் – விருந்தாளிக்குரியது.

5.4.27 தே^{3}வாத்தல்

'தே^{3}வ' என்ற சொல்லுக்குப்பின், 'தல்' ஒட்டு பொருள் மாற்றமில்லாமல் இணைக்கப்படும். தே^{3}வதா கடவுள் (=தே^{3}வ:)

5.4.28 அவே: க:

'அவி' என்ற சொல்லோடு 'க' ஒட்டு பொருள் மாற்றமில்லாமல் இணைக்கப்படும். ஆவிக: (= அவி)

5.4.29 யாவாதி^{3}ப்^{4}ய: கன்

'யாவ' முதலிய சொற்களுக்குப்பின் 'கன்' ஒட்டு பொருள் மாற்றமில்லாமல் வரும். யாவக: (யாவ): மணிக: (மணி)

வா: உஷ்ண, ஸீ'த என்ற சொற்களுக்குப்பின் இவ்வொட்டு பருவங்களைக் குறிக்கும்போது வரும்.

உஷ்ணக:, ஸீ1தக ருது. ஆனால் உஷ்ணோ அக்3னி: ஸீத உத3கம்

வா: லூன, வியாத என்ற சொற்களோடு 'கன்' ஒட்டு விலங்கைச் சுட்டும்போது வரும். லூனக: பஸு, வியாதக: பஸு: ஆனால் லூனா த3ர்ப4ா, வியாதோ நீச:

வா: 'அணு' என்ற சொல்லோடு 'கன்' ஒட்டு 'கெட்டிக்காரன்' என்ற பொருளில் வரும். அணுக: ஸூக்ஷ்மத்3ருத் 'கூர்மை, மான புத்தியுள்ளவன்' ஆனால் 'அணு' 'சிறிய'

வா: 'புத்ர' என்ற சொல்லுக்குப்பின் 'கன்' ஒட்டு செயற்கையான' என்ற பொருளில் வரும்.

புத்ரக: 'உலோகத்தினால் செய்யப்பட்ட குழந்தை 'பொம்மை' ஆனால் புத்ர – பிள்ளை

வா: 'ஸ்நாத' என்ற சொல்க்குப்பின் 'வேதங்களைப் படித்து முடித்த மாணவன்' என்ற பொருளில் 'கன்' ஒட்டு வரும்.

ஸ்நாதக: வேதங்கள் படித்து முடித்தவன்

வா: 'ஸூன்ய' என்ற சொல்லுக்குப்பின் 'வெறுமை, இன்மை' என்ற பொருளில் இவ்வொட்டு வரும்.

ஸூன்யக: க4ட1: – தண்ணீரில்லாத பானை ஆனால் ஸூன்ய: ப்ரத்யய: 'வெற்றுருபு'

வா: 'த3ான' என்ற சொல்லோடு இகழ்ச்சியாகக் கூறும் போது 'கன்' ஒட்டு வரும். த3ானக:

வா: 'தனு'வுக்குப்பின் 'கன்' ஒட்டு 'நூல்' என்ற பொருளில் வரும்.

தனுக:– மெல்லிய நூல் ஆனால் தனு: ஸரீரம் 'உடம்பு'

வா: 'ஈயஸ்' ஐ ஈறாகக்கொண்ட சொற்களோடு 'கன்' ஒட்டு வரும். ஸ்1ரேயஸ்க:

வா: பெண் குழந்தைகள் வைத்து விளையாடும் பொம்மைகள் என்ற பொருளைச் சுட்டுஞ் சொற்களுக்குப்பின் இவ்வொட்டு வரும். கந்து3கம் – 'பந்து'

5.4.30 லோஹிதான் மணௌ

'லோஹித' என்ற சொல்லுக்குப்பின் 'கன்' ஒட்டு 'மணிக்கல்' லைக்குறிக்க பொருள் மாற்றமில்லாமல் வரும்.

லோஹிதக: – லோஹித 'சிவப்புக்கல், கெம்பு' ஆனால் லோஹித - சிவப்பு

5.4.31 வர்ணே ச அநித்யே

நிலையற்ற நிறத்தைக் குறிக்கும்போது 'லோஹித' என்ற சொல்லுக்குப் பின் 'கன்' ஒட்டு வரும். லோஹிக: கோபேன. 'கோபத்தினால் சிவந்த' ஆனால் லோஹிதம் ருதி4ரம் சிவப்பான ரத்தம்

வா: லோஹிதால்லிங்க3 ப3ாதனம் வா வக்தவ்யம் 'லோஹித' என்ற சொல்லிலிருந்து ஆக்கப்பட்ட சொல் அதன் மூலச் சொல்லின் பாலைக் கொண்டதாகாது. லோஹிதிகா கோபேன, லோஹினிகா கோபேன (பெண்பால்)

5.4.32 ரக்தே

சாயமேற்றிய ஒரு பொருளைச் சுட்டும்போது 'கன்' ஒட்டு 'லோஹித' என்ற சொல்லுக்குப்பின் வரும். லோஹித: கம்ப3ல: அல்லது பட: 'சிவப்புக் கம்பளி அல்லது துணி' லோஹிதிகா அல்லது லோஹினிகா ஸாடீ: 'சிவப்புப் புடவை'

5.4.33 காலாச் ச

'கால' (கருப்பு) என்ற சொல்லுக்குப்பின்னும் 'கன்' ஒட்டு நிலையற்ற நிறம், சாயமேற்றிய என்ற பொருளில் வரும்.
காலகம் முக2ம் வைலக்ஷ்யேண.
'குழப்பத்தினாலோ வெட்கத்தினாலோ கருத்த முகம்' :
காலக: பட: – கருப்புச் சாயமேற்றிய துணி;
காலிகா ஸாடீ : 'கருப்புப் புடவை'

5.4.34 வினயாதி3ப்4யஷ் ட2க்

'வினய' முதலிய சொற்களுக்குப்பின் ட2க் (க அல்லது இக) ஒட்டு பொருள் மாற்றமில்லாமல் வரும். வைனயிக: = வினய: ஸாமாயிக:

5.4.35 வாசோ வ்யாஹ்ருதார்த2யாம்

'வாச்' என்ற சொல்லுக்குப்பின் 'ட2க்' ஒட்டு 'மற்றொருவரால் கூறப்பட்டதை வேறொருவன் செய்தியாக அறிவிப்பது' என்ற பொருளில் வரும்.
வாசிகம் கத2யதி – 'அவன் செய்தியைக் கூறுகிறான்'
ஆனால் மது4ரா வாக்3 தே3வத3த்தஸ்ய 'தேவதத்தனுடைய பேச்சு இனிமையானது'

5.4.36 தத்3யுக்தாத் கர்மணோ அண்

கர்மன் 'செயல்' என்ற சொல்லுக்குப்பின் 'அண்' ஒட்டு. அறிவிக்கப்பட்ட ஒரு செய்தியின் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை 'யென்ற பொருளில் வரும். கார்மணம்

வா: அண்ப்ரகரணே குலால வருட^{3} நிஷாத^{3} கர்மார சண்ட^{3}ால மித்ரா மித்ரேப்^{4}யஸ் ச^{2}ந்த^{3}ஸ்யுப ஸங்க்^{2}யானம்
வேதமொழியில், குலால, வருட^{3}, நிஷாத^{3}, கர்மார, சண்ட^{3}ால, மித்ர, அமித்ர என்ற சொற்களோடு 'அண்' ஒட்டு இணைக்கப்படும். கௌலால:, வாருட^{3}:, நைஷாத: கார்மார:, சாண்ட^{3}ால:, மைத்ர:, ஆமித்ர:

வா: ஸான்னாய்யானுஜா வரானுஷுகாஷ்டுப^{4} சாதுஷ்ப்ராஸ்யராக்ஷோக்^{4}ன வையாத வைக்ருதவாரி வஸ்க்ருதாக்^{3}ராயணாக்^{3}ரஹாயண ஸாந்தபனா. பொருள் மாற்றமில்லாமல் 'அண்' ஒட்டிணைத்தாக்கப்பட்ட கீழ்க்கண்ட சொற்கள் வேதமொழியிலும் பேச்சு மொழியிலும் காணப்படுகின்றன.
ஸான்னாய்ய:, ஆனுஜாவர: (ஆனுஜாத^{3}வர), ஆனுஷுக:, ஆனுஷ்டுப^{4}:, சாதுஷ்ப்ராஸ்ய:, ராக்ஷோக்^{4}னா:, வையாத:, வைக்ருத:, வாரிவஸ்க்ருத:, ஆக்^{3}ராயண:, ஆக்^{3}ரஹாயண்யா:, ஸாந்தாபன:

5.4.37 ஒஷதே^{4} ரஜாதௌ
ஒரினத்தைச் சுட்டாதபோது 'ஒஷதி^{4}' என்ற சொல்லுக்குப்பின் 'அண்' ஒட்டு வரும் (ஸ்வார்தி^{2}க)
ஔஷதி^{4}ம் பிப^{3}தி – மருந்து குடிக்கிறான்
ஔஷதி^{4}ம் த^{3}த^{3}ாதி – மருந்து கொடுக்கிறான்
ஆனால் ஒஷத^{4}ய: க்ஷேத்ரே ரூட^{3}ா ப^{4}வந்தி
'நிலத்தில் செடிகள் (மருந்து) வளர்கின்றன'

5.4.38 ப்ரக்^{3}ஞாதி^{3}ப்^{4}யஸ்^{1} ச
'ப்ரக்^{3}ஞ' முதலிய சொற்களுக்குப்பின் 'அண்' ஒட்டு பொருள் மாற்றமில்லாமல் இணைக்கப்படும்.
ப்ராக்^{3}ஞ: = ப்ரக்^{3}ஞ: 'அறிவாளி'
ப்ராக்^{3}ஞீ (பெண்பால்)
ப்ராக்^{3}ஞ:– 'அறிவுடையவன்' என்ற சொல்லின் பெண்பாற்சொல்
ப்ராக்^{3}ஞா: இச்சொல் அதாவது ப்ராக்ஞ:, ப்ராக்^{3}ஞா 'அறிவு' என்ற சொல்லோடு 'மதுப்' ஒட்டின் பொருளைச் சுட்டும் 'ண' ஒட்டிணைத்து ஆக்கப்பட்டது. (5.2.101). இச்சூத்திரத்தில் (5.4.38) குறிப்பிடப்பட்டிருக்கும், ப்ரக்^{3}ஞ, ப்ராஜானாதி 'நன்கறிந்தவன்' என்ற வேர்ச் சொல்லிருந்து ஆக்கப்பட்டது. 'ப்ரக்^{3}ஞா' வகுப்பில் காணப்படும் வித^{3}ன் என்ற சொல் 'வித்^{3}' என்ற தாதுவோடு ஸ'த்ரு ஒட்டிணைக்கப்பட்டு ஆக்கப்பட்டது (பார்க்க 7.1.36) 'ஸ்ரோத்ர' என்ற சொல்லோடு 'அண்' ஒட்டிணைத்து ஸ்ரௌத்ரம் 'உடல்' என்ற பொருளில் வரும். ஜுஹ்வத் என்ற சொல்லோடு என்ற பொருளைச் சுட்டும்போது 'அண்' ஒட்டிணைத்து ஜௌஹுத் என்ற சொல்லாக்கப்படும்.
கார்ஷ்ண: (க்ருஷ்ண + அண்)

5.4.39 ம்ருத^{3}ஸ்திகன்

'ம்ருத்^{3}' என்ற சொல்லோடு 'திகன்' ஒட்டு பொருள் மாற்றமில்லாமல் இணைக்கப்படும்.

5.4.40 ஸஸ்னௌ ப்ரஸ1ம்ஸாயாம்

ஸ, ஸ்ன ஒட்டுக்கள், ம்ருத்^{3} என்ற சொல்லுக்குப்பின் 'சிறந்த' என்ற பொருளைச் சுட்டும்போது வரும்.

ம்ருத்ஸா, மிருத்ஸ்னா 'சிறந்த மண்' இவ்வொட்டுக்கள் நித்ய ஒட்டுக்கள். அதாவது கண்டிப்பாக வருபவை.

5.4.41 வ்ரு^{1}க ஜ்யேஷ்ட^{2}ாப்^{4}யாம் தில்தாதிலௌ சச்ச^{2}ந்த^{3}ஸி

வ்ருக, ஜ்யேஷ்ட என்ற சொற்களோடு வேதமொழியில், தில் (தி) 'தாதில்' ஒட்டுக்கள் 'சிறந்த' என்ற பொருளில் வரும்.

வ்ருகதி:, ஜ்யேஷ்ட^{2}தாதி:

5.4.42 ப^{3}ய்வல் பார்த^{2}ாச்ச^{2}ஸ் காரகாத^{3}ன்யதரஸ்யாம்

மிகுதி அல்லது குறைவு என்ற பொருளைச் சுட்டுஞ் சொற்களுக்குப்பின் 'ஸ'ஸ்' ஒட்டு விருப்பாக அச்சொற்கள் காரகத்தைக் குறிக்கும்போது வரும். ப^{3}ஹுஸோ'ா த^{3}த^{3}ாதி (ப^{3}ஹுனி ததாதி) அல்பஸோ'ா த^{3}த^{3}ாதி 'நிறைய அல்லது குறைவாகக் கொடுக்கிறான்' இங்கு குறிப்பாக ஒரு காரகத்தைக் கூறாததால், எந்தக் காரகமும் வரலாம் என்ற பொருள்படும்.

ஆனால் க^{3}ாம் ததாதி ப^{3}ஹுனாம் ஸ்வாமி (6ஆம் வேற்றுமை காரகமல்ல)

பூ^{4}ரிஸோ ததாதி–நிறையக் கொடுக்கிறான் ஸ்தோகஸோ ததாதி – குறைவாகக் கொடுக்கிறான்

பூ^{4}ரி, (மிகுதி) ஸ்தோக (குறைவு) என்ற சொற்களும் ப^{3}ஹு, அல்ப என்ற சொற்களின் பொருளைக் கொண்டது. சூத்திரத்தில் காணப் படும் 'அர்த^{2}ாத்' என்ற சொல்லிலிருந்து. ப^{3}ஹு, அல்ப என்ற சொற்களின் பொருளைக் கொண்ட மற்ற சொற்களும் இத்துள்ளடங்கும் என்று தெளிவாகிறது.

வா: ப^{3}ஹ்வல்பார்த^{2}ான் மங்கலா மங்க^{3}ல வசனம்

இவ்வொட்டுக்கள் ப^{3}ஹு, அல்ப ஆகியவைகளுடன், முறையே, மங்கலமானதும் அமங்கலமாதுமான செயல்களைச் சுட்ட வரும்.

5.4.43 ஸங்க்^{2}யா ஏகவசனாச் ச வீப்ஸாயாம்

ஸ^{1}ஸ் ஒட்டு. எண்ணுப் பெயர்களுக்குப் பின்னும், ஒருமையில் நிற்கும் நாணயத்தைக் குறிக்குஞ் சொற்களுக்குப்பின்னும் விருப்பாக 'பங்கிட்டளித்தல்' என்ற பொருளில் வரும். த்^{3}விஸோ மோத^{3}கௌ த^{3}த^{3}ாதி அவன் ஒவ்வொருவருக்கும் இரண்டு மோதகங்கள் கொடுக்கிறான்.

கார்ஷாபணஸோ த^{3}த^{3}ாதி – 'அவன் ஒவ்வொருவருக்கும் ஒரு கார்ஷாபணம் கொடுக்கிறான்' ஆனால் த்^{3}வயோர் த்^{3}வயோர் ஸ்வாமீ – 'இரண்டிரண்டின்

சொந்தக்காரன் (6ஆம் வேற்றுமை காரகமல்ல) கார்ஷாபணஸ்ய கார்ஷாபணஸ்ய ஸ்வாமீ 'ஒவ்வொருவரும் ஒரு கார்ஷாபணமுடையவன்'.

5.4.44 ப்ரதியோகே^{3} பஞ்சம் யாஸ்தஸி:
'ப்ரதி' என்ற கர்மப்ரவசனீயத்துடன் நிற்க வேண்டுமென்று விதிக்கப்பட்ட ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுக்குப்பின் 'தஸி' ஒட்டு வரும். 2.3.11 இல் இந்த ஐந்தாம் வேற்றுமை விதிக்கப்பட்டிருக்கிறது.
ப்ரத்^{3}யும்ன: வாஸுதே^{3}வத: ப்ரதி அபி^{4}மன்யு: அர்ஜுனத: ப்ரீதி. இது ஒரு விருப்பு விதியாகையால், ப்ரத்^{3}யும்ன: வாஸுதே^{3}வாத் ப்ரதி என்றும் வரலாம்.

வா: தஸிப்ரகரணே ஆத்^{3}யாதி^{3}ப்^{4}ய உபஸங்க்^{2}யானம்
'ஆதி' முதலியவைகளோடும் 'தஸி' ஒட்டு இணைக்கப்படும் ஆதி^{3}த:, 'முதலிலிருந்து', மத்^{4}யத: 'நடுவிலிருந்து' பார்ஸ்'வத: 'அருகிலிருந்து'.

5.4.45 அபாத^{3}ானே ச அஹீயரு ஹோ:
ஹீய ('ஹா' என்ற தாதுவின் செயப்பாட்டு வினை), ருஹ் என்ற தாதுக்களோடு தொடர்புள்ள அபாதான காரகத்தைத் தவிர்த்த, ஏனைய அபாதான காரகங்களைக் குறிக்குஞ் சொற்களோடு 'தஸி' வரும்.
க்^{3}ராமத: அல்லது க்^{3}ராமாத^{3}ாக^{3}ச்ச^{2}தி, – 'கிராமத்திலிருந்து வருகிறான்'
சோராத் அல்லது சோரத: பி^{3}பே^{4}தி – 'திருடனிடமிருந்து பயப்படுகிறான்'
ஆனால் ஸார்த^{2}ாத் ஹீயதே – 'கூட்டத்திலிருந்து விலக்கப்பட்டவன்' பாவதாத வரோஹதி – மலையிலிருந்து இறங்குகிறான். 'ஹீய' என்ற சூத்திரத்தின் சொல், ஜஹாதி என்ற நிகழ்காலச் சொல்லைக் கொடுக்கும் 'ஹா' என்ற தாதுவைச் சுட்டும் ஜிஹீதே என்ற வடிவத்தைக் கொடுக்கும் தாதுவையல்ல. ஆகவே பூ^{4}மித: உஜ்ஜிஹீ தே அல்லது பூமேருஜ்ஜியீதே.

5.4.46 அதிக்^{3}ரஹாவ்யத^{2}னக்ஷேபேஷ்வகர்தரி த்ருத்யாயா:
கர்த்தாவைச் சுட்டாத 3ஆம் வேற்றுமைச் சொல்லுக்குப்பின்னும், 'மேம்படு, சிறப்புறு, விட்டுக்கொடு, குறைகூறு' ஆகிய பொருட்களைச் சுட்டும் வினைகளோடு வரும் 3ஆம் வேற்றுமைச் சொற்களுக்குப் பின்னும் 'தஸி' ஒட்டு வரும்.
வ்ருத்தேனாதிக்^{3}ருஹ்யதே அல்லது வ்ருத்ததோ அதிக்^{3}ருஹ்யதே அவன் தனது நடத்தையால் சிறப்புறுகிறான்/மேம்பட்டு நிற்கிறான் வ்ருத்தேன ந வ்யத^{2}தே அல்லது வ்ருத்ததோ நவ்யத^{2}தே 'அவன் நடத்தையின் மூலம் ஒருவருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டான்' வ்ருத்தேன அல்லது வ்ருத்தத: க்ஷிப்த: 'அவன் தனது நடத்தையால் பழிக்கப்படுகிறான்.'
ஆனால் தே^{3}வத^{3}த்தேன க்ஷிப்த: தேவதத்தனால் குறை கூறப்பட்டவன்.

5.4.47 ஹ்ரியமான பாப யோக^3ாச் ச

ஹ்ரீ (வினை), பாப (பெயர்) என்ற சொற்களைச் சார்ந்து நிற்கும் 3ஆம் வேற்றுமைச் சொற்களுக்குப்பின் 'தஸி' ஒட்டு விருப்பாக (அச்சொற்கள் கர்த்தாவைச் சுட்டாமல் நிற்கும் போது) வரும்.

சாரித்ரேண ஹ்ரியதே அல்லது சாரித்ரதோ ஹ்ரியதே–'தன் நடத்தையால் அவன் ஒதுக்கி வைக்கப்பட்டான்' சாரித்தேண பாப: அல்லது சாரித்ரத: பாப: 'நடத்தையால் தீங்கிழைப்பவன்' 'நிந்தித்தல்' என்ற பொருளைச் சுட்டாமல் ஒரு நிகழ்ச்சியைக் கூறும்போது, இவ்வொட்டு வரும். 5.4.46இல் கூறப்பட்ட விதி, இகழ்ந்து பேசும்போது பயன்படுத்தப்படும்.

5.4.48 ஷஷ்ட்^{2}யா வ்யாஸ்ரயே 'தஸி' ஒட்டு விருப்பாக,

ஆறாம் வேற்றுமைச் சொல்லுக்குப்பின், 'ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்த' என்ற பொருளில் வரும். தேவா அர்ஜுனதோ அப^{4}வன் – 'தேவர்கள் அர்ஜுனனுடைய பக்கத்தைச் சேர்ந்தவர்கள்' ஆனால் வ்ருக்ஷஸ்ய ஸ^1ாக^2ா 'மரக்கிளை'

5.4.49 ரோகாச் சாபநயனே

'தஸி' ஒட்டு, ஒரு நோயைக் குறிக்கும் 6ஆம் வேற்றுமைச் சொல்லுக்குப்பின் 'அந்நோயைக் குணப்படுத்துதல்' என்ற பொருளில் விருப்பாக இணைக்கப்படும்.

ப்ரவாஹிகாத: குரு – 'பேதியைக் குணப்படுத்து'

ஆனால் ப்ாவாஹிகாயா: ப்ரகோபனம் குரு

5.4.50 அ பூ^{4}த தத்^{3}ப^4ாவே க்ருபூ^{4} அஸ்தியோகே^{3} ஸம்பத்^{3}ய கர்தரி ச்வி:

முன்பில்லாத ஒரு நிலையைக் கர்த்தாவடைந்துள்ளதாகக் குறிப்பிடும் சொல்லோடு, பூ^{4}, அஸ், க்ரு^{1} தாதுக்கள் நிற்கும்போது, அச்சொல்லோடு 'ச்வி' ஒட்டு இணைக்கப்படும். ஸு^{1}க்லீ கரோதி:– 'வெள்ளையாக இல்லாத ஒருவனை அல்லது ஒன்றை மற்றொருவன் வெள்ளையாக்குகிறான்'

ஸு^{1}க்லீ ப^{4}வதி: ஸு^{1}க்லீ ஸ்யாத் – 'அழுக்காயிருந்ததை தூய்மையாக்குகிறான்'

ஸு^{1}க்ல + ச்வி = ஸு^{1}க்ல் + ஈ (7.4.32) ச்வி = ஸு^{1}க்லீ + 0 (6.1.67) = ஸு^{1}க்லீ

க^{4}ட^1 கரோதி ம்ரு^{1}த^{3}ம் – 'மண்ணைப் பானையாகச் செய்கிறான்'

இச்சூத்திரத்தில் காணப்படும் 'அபூ^{4}த தத்^{3}ப^4ாவ' என்ற சொல் பாணினியால் எழுதப்பட்டதல்ல. இது வார்த்திக காரரால் சேர்க்கப்பட்டது. காஸிகா. இச்சொல்லையும் சேர்த்து சூத்திரம் அமைக்கிறது.

5.4.51 அருர் மனஸ்^{1}சக் ஷு ஸ்^{1}சேதோரஹோரஜஸாம் லோபஸ்^{1}ச

அருஸ்'காயம்'. மனஸ் 'மனது', சக் ஷுஸ் 'கண்', சேதஸ் 'விழிப்புள்ள நிலை', ரஹஸ் இரகசியம்', ரஜஸ் 'உணர்ச்சி' ஆகியவைகளுக்குப்பின் 'ச்வி' ஒட்டு வரும். அச்சொற்களினிறுதி மெய், இவ்வொட்டுக்கு முன் கெடும்.

அரூ கரோதி, அரூப^{4}வதி, அரூஸ்யாத்

'காயப்படுத்துகிறான்' 'காயமடைகிறான்'

உன் மனீ கரோதி, உன் மனீ ப[4]வதி, உன் மனீஸ்யாத்

'தடுமாற்றம் உண்டு பண்ணுகிறான்', 'தடுமாற்றமடைகிறான்'

உச்சக்ஷுகரோதி, உச்சக்ஷு ப[4]வதி, உச்சக் ஷுஸ்யாத் 'ஒருவ னைக் கண்ணை உயர்த்தச் செய்கிறான். 'கண்ணை உயர்த்துகிறான்' விசேத் கரோதி, விசேதீ ப[4]வதி, விசேதீ ஸ்யாத் 'விழிப்புறச் செய்கிறான்', 'விழித்திருக்கிறான்' விரஹீ கரோதி. விரஹீ ப[4]வதி, விரஹீ ஸ்யாத்

'பிரிக்கிறான்'. 'பிரிந்திருக்கிறான்' விரஜீ கரோதி, விரஜீ ப[4]வதி விரஜீஸ்யாத் ஒருவனை உணர்ச்சியடைவதிலிருந்து தடுக்கிறான், உணர்ச்சிவசமாகாதிருக்கிறான்.

5.4.52 விப[4]ாஷா ஸாதி கார்த்ஸ்ன்யே

'ச்வி' ஒட்டின் பொருளில் ஸாதி ஒட்டு, ஒன்று மற்றொன்றாக முழுவதும் மாற்றமடைவதைச் சுட்டும் போது விருப்பாக வரும்.

மேற்சூத்திரத்தில் குறிப்பிட்ட 'முன்பு இல்லாத ஒரு நிலையைக் கர்த்தாவடைவதைக் குறிக்கும்போது, அச் சொல்லுடன் பூ, க்ரு, அஸ் ஒட்டுக்கள் நிற்கும்போது' ஆகியவை இச்சூத்திரத்திலும் அனுவிருத்தியாகும். அக்[3]னிஸாத்[3] ப[4]வதி ஸஸ்த்ரம் ஆயுதம் நெருப்பாக ஆகிவிட்டது அல்லது அக்னீப[4]வதி உத[3]கஸாத்[3] ப[4]வதி லவணம் அல்லது உத[3]க் ப[4]வதி லவணம்.

'உப்பு முழுவதும் தண்ணீராக ஆகிவிட்டது'

சூத்திரத்தில் 'விப[4]ாஷா' என்று கூறப்பட்டிருப்பதால், 'ச்வி' ஒட்டு மிங்கு வரும்.

5.4.53 அபி[4]விதெ[4]ள ஸம்பத[3]ா ச

'ஸம்பத்' என்ற வினையோடு நிற்கும் சொல்லோடு 'ச்வி' ஒட்டின் பொருளில் 'ஸாதி' ஒட்டு, ஒரேயினத்தைச் சேர்ந்த எல்லாப் பொருட்கள்களும் மற்றொன்றாக மாறுதல்' என்ற பொருளில் வ்ரும். 'க்ரு[1]', பூ[4]', 'அஸ்' என்ற வினைகளுடன் நிற்கும் போதும் இதே பொருளைக் கொடுக்கும் என்று 'ச' சுட்டுகிறது. இதே பொருளைச் சுட்ட 'ச்வி' ஒட்டு மிணைக்கப்படுமென்பதை மேற்சூத்திரத்திலிருந்து அனுவிருத்தி மூலம் 'விபாஷா' என்ற சொல்லைச் சேர்த்து விளக்கப்டுவதிலிருந்து தெளிவாகிறது. அப்போது க்ரு முதலிய வினைகளும் இத்துடன் வரவேண்டும். அக்[3]னிஸாத் ஸம்பத்[3]பயதே அல்லது அக்[3]னிஸாத்[3] ப[4]வதி அல்லது அக்[3]னீ ப[4]வதி.

ஒரேயினத்தைச் சேர்ந்த எல்லாப் பொருட்களும் மாற்றமடைவதைக் குறிக்கும் அபி[4]விதி விகாரம். இதில் மாற்றம் முழுமையாகவோ, பகுதியாகவோ ஏற்படலாம். காட்டாக அஸ்யாம் ஸேனாயாம் உத்பாதேன ஸர்வம் ஸ'ஸ்த்ரம் அக்னிஸாத்[3] ப[4]வதி – இச்சேனையின் ஆயுதம் முழுவதும் நெருப்பாகிவிட்டது.'

வர்ஷாஸு ஸர்வம் லவணம் உத[3]க ஸாத் ஸம்பத்[3]யதே மழைக் காலத்தில் உப்பெல்லாம் தண்ணீராக மாறிவிடுகிறது. இக்காட்டுக்களில் காணப்படும் ஸர்வ என்ற சொல் ஆயுத வகையைச் சேர்ந்த எல்லா பொருட்களும் அதாவது

சுத்தி, ,ஈட்டி போன்றவையும், உப்பின் தன்மையைக் கொண்ட எல்லா பொருட்களையும் சுட்டும். ஆனால், இப்பொருட்கள் ஒவ்வொன்றையும் தனித் தனியாகக் குறிக்காது.
